بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ نَحْمَدُهٗ وَنُصَلِّيْ عَلٰى رَسُوْلِهِ الْكَرِيْمِ وَعَلٰى عَبْدِهِ الْمَسِيْحِ الْمَوْعُوْدِ

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

தொகுதி 8

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

இதழ் 16 & 17

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரி கமரி 1444 - ரமலான் 28 - 06 ஷவ்வால்★ ஹிஜ்ரி ஷம்ஸி 1402 - ஷஹாதத் 20 - 27 ★20-27 ஏப்ரல் 2023

## அல்லாஹ்வின் கட்டளை

شَهْرُ رَمَضَانَ الَّذِيْٓ اُنْزِلَ فِيْهِ الْقُرْاٰنُ

هُدًى لِّلنَّاسِ وَبَيِّنٰتٍ مِّنَ الْهُدٰى وَالْفُرْقَانِ

فَمَنْ شَهِدَ مِنْكُمُ الشَّهْرَ فَلْيَصُمْهُ

**பொருள் :**

ரமலான் மாதம் திருக்குர்ஆன் அருளப்பட்ட மாதமாகும். திருகுர்ஆன் எல்லா மக்களுக்கும் நேர்வழிக் காட்டக்கூடியதும், நேர்வழியைத் தெளிவாக்கக்கூடியதும் (நன்மை,தீமையை) பிரித்தறியக் கூடியதும் ஆகும். எனவே உங்களுள் அம்மாதத்தைக் காண்பவர் அதில் நோன்பு நோற்க வேண்டும்.

(அல்பக்கரா : 186)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸுர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸுர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## தனது நஃப்ஸின் மீது மனிதன் சுயமே பரிவு காட்டக்கூடாது. மாறாக தனது நஃப்ஸின் மீது இறைவன் பரிவு காட்டும் வகையில் மனிதன் தன்னை ஆக்கிக் கொள்ள வேண்டும் ஏனெனில் மனிதன் தனது நஃப்ஸின் மீது காட்டுகின்ற பரிவு என்பது அவனுக்கு நரகமாகும் இறைவனின் பரிவு என்பது சொர்க்கமாகும்

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

இது ஒரு நுட்பமான விஷயம் ஆகும். அதாவது ஒரு நபருக்கு (தனது நஃப்ஸின் சோம்பலின் காரணமாக) நோன்பு கடினமாக இருக்கும்போது அவர் தனது மனதில் இவ்வாறு எண்ணம் கொள்கின்றார்.

அதாவது நான் நோயாளி ஆவேன். நான் ஒருவேளை உணவு உண்ணாவிட்டால் இன்ன இன்ன நோய்கள் எனக்கு வந்துவிடும். மேலும் இவ்வாறு ஆகிவிடும். அவ்வாறு ஆகிவிடும் என்று அவர் எண்ணம் கொள்வார். எனவே அல்லாஹ்வின் அருட்கொடைகளை தனக்கு கடினமானதாக சுயமே எண்ணிக் கொள்கின்ற மனிதன் எப்போது அந்த நற்கூலிக்கு தகுதி படைத்தவனாக ஆக முடியும். ஆயினும், ரமலான் வந்துவிட்டது. மேலும் அது வரவேண்டும். நான் அதில் நோன்பு நோற்க வேண்டும் என்று நான் காத்திருந்தேன் என அவரது உள்ளம் மகிழ்ச்சியடைகின்றது. ஆனால், பின்னர் நோயின் காரணமாக நோன்பு நோற்க முடியவில்லை என்றால் விண்ணில் நோன்புகளிலிருந்து அந்த நபர் இழப்பிற்குரியராக இல்லை. இந்த உலகில் ஏராளமான மக்கள் சாக்குபோக்குகளை கூறக்கூடியவர்களாக உள்ளனர். எவ்வாறு உலக மக்களை நாம் ஏமாற்றிவிடுகின்றோமோ அவ்வாறு இறைவனை ஏமாற்றுகின்றோம் என்று அவர்கள் கருதுகின்றனர். சாக்குபோக்குகளை தேடக்கூடியவர்கள் தங்களிடமிருந்து சுயமே விவகாரத்தை தேடுகின்றனர். ஆனால் இறைவனின் பார்வையில் அது சரியானதல்ல. மனிதன் நாடினால் பின்னர் இந்த சாக்குபோக்குகளின் அடிப்படையில் வாழ்நாள் முழுவதும் அமர்ந்து கொண்டே தொழுது கொண்டிருக்கட்டும். மேலும் ரமலானின் நோன்புகள் முழுவதையும் நோற்காமல் இருக்கட்டும். ஆனால், இறைவன் அவரது நிய்யத்தையும், எண்ணத்தையும் அறிகின்றான். எவர் உண்மை மற்றும் தூய்மையுடன் நோன்பு வைக்கின்றார் என்பதை அவன் அறிகின்றான். அவரது உள்ளத்தில் வேதனை உள்ளதை அவன் அறிகின்றான். இறைவன் அவருக்கு அதிகமான நற்கூலியை வழங்குகின்றான். ஏனெனில், உள்ளத்தில் வேதனை கொள்வது ஒரு மதிக்கத்தக்க விஷயம் ஆகும். சாக்குபோக்குகளை தேடக்கூடிய மனிதன் சுய விளக்கங்களை சார்ந்து நிற்கின்றான். ஆனால் இறைவனின் பார்வையில் அந்த சாக்குபோக்குகளுக்கு எந்த மதிப்பும் கிடையாது. நான் ஆறு மாதம் நோன்பு நோற்றிருந்தேன். அப்போது ஒருமுறை நான் நபிமார்களின் குழுவினரை (ஆன்மிக காட்சியில்) நான் சந்தித்தேன். நீ ஏன் உனது நஃப்ஸை இந்த அளவிற்கு கடினத்தில் ஆழ்த்திக் கொள்கிறாய். இதிலிருந்து வெளியேறு! என்று அவர்கள் கூறினர். அதேபோன்று மனிதன் தன்னை சுயமே இறைவனுக்காக கடினத்தில் ஆழ்த்தும்போது அவன் சுயமே தாய் தந்தையைப் போன்று கருணை காட்டியவாறு, நீ ஏன் கடினத்தில் வீழ்ந்திருக்கிறாய்? என்று அவரிடம் கூறுகின்றான்.

இந்த மக்கள் சாக்குபோக்குகளை கூறி தம்மை தாமே கடினங்களிலிருந்து விலக்கிக் கொள்கின்றனர். எனவே இறைவன் அவர்களை மற்ற கடினங்களில் ஆழ்த்துகின்றான். மேலும் (அவற்றிலிருந்து) அவர்களை வெளியேற்றுவதில்லை. தம்மை தாமே கடினத்தில் ஆழ்த்திக் கொள்ளக்கூடியவர்களை அவன் சுயமே வெளியேற்றுகின்றான்.

தனது நஃப்ஸின் மீது மனிதன் சுயமே பரிவு காட்டக்கூடாது. மாறாக தனது நஃப்ஸின் மீது இறைவன் பரிவு காட்டும் வகையில் மனிதன் தன்னை ஆக்கிக் கொள்ள வேண்டும். ஏனெனில் மனிதன் தனது நஃப்ஸின் மீது காட்டுகின்ற பரிவு என்பது அவனுக்கு நரகமாகும். இறைவனின் பரிவு என்பது சொர்க்கமாகும். இப்ராஹீம் (அலை) அவர்களின் சம்பவத்தை சிந்தித்து பாருங்கள். எவர்கள் நெருப்பில் விழ விரும்புகின்றார்களோ அவர்களை இறைவன் நெருப்பிலிருந்து காப்பாற்றுகின்றான். எவர்கள் நெருப்பிலிருந்து தப்பிக்க விரும்புகின்றார்களோ அவர்கள் நெருப்பில் போடப்படுகின்றார்கள். இறைவனின் வழியில் எவற்றையெல்லாம் எதிர்கொள்ள நேரிடுமோ அவற்றை நிராகரிக்க கூடாது என்பது இஸ்லாம் ஆகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது பாதுகாப்பை குறித்து சுயமே கவலையடைந்திருந்தால் பின்னர்

وَاللّٰهُ يَعْصِمُكَ مِنَ النَّاسِ

என்ற வசனத்தை அல்லாஹ் இறக்கியிருக்க மாட்டான். இறை பாதுகாப்பிற்கான இரகசியம் இதுவே ஆகும்.

(மல்ஃபூஸாத், தொகுதி 2,பக்கம் 564, காதியான் பதிப்பு -2003)

* * * * *

## நபிமொழி

இஃப்தாரி செய்வதற்கு முன்பும், பின்னரும் செய்ய வேண்டிய துஆ

عَنْ مُعَاذِ بْنِ زُهْرَةَ رَضِيَ اللّٰهُ عَنْهُ اَنَّهٗ بَلَغَهٗ اَنَّ النَّبِيَّ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ كَانَ اِذَا اَفْطَرَ، قَالَ : اَللّٰهُمَّ لَكَ صُمْتُ وَعَلٰى رِزْقِكَ اَفْطَرْتُ۔

ஹஸ்ரத் மஆஸ் பின் ஸஹ்ராஃ (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இஃப்தாரி நேரத்தில்

اَللّٰهُمَّ لَكَ صُمْتُ وَعَلٰى رِزْقِكَ اَفْطَرْتُ

என்ற இந்த துஆவை செய்து வந்தார்கள். பொருள்: அல்லாஹ்வே! நான் உனது திருப்திக்காக நோன்பு நோற்றேன். மேலும் உன்னால் வழங்கப்பட்ட உணவைக் கொண்டு நான் நோன்பு திறக்கின்றான்.

عَنِ ابْنِ عُمَرَ رَضِيَ اللّٰهُ عَنْهُ قَالَ : كَانَ النَّبِيُّ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ اِذَا اَفْطَرَ قَالَ : ذَهَبَ الظَّمَاُ وَابْتَلَّتِ الْعُرُوْقُ وَثَبَتَ الْاَجْرُ اِنْ شَاءَ اللّٰهُ۔

(அபூதாவூத் கிதாப் அஸ்ஸியாம், பாபுல் கவ்ல் இன்தல் இஃப்தார்)

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) இஃப்தாரி செய்த பிறகு

ذَهَبَ الظَّمَاُ وَابْتَلَّتِ الْعُرُوْقُ وَثَبَتَ الْاَجْرُ اِنْ شَاءَ اللّٰهُ

என்ற துஆவை செய்து வந்தார்கள்.

தாகம் தணிந்து கொண்டிருக்கின்றது. மேலும் நரம்புகள் புத்துணர்வு பெற்றன. மேலும் நற்கூலி உறுதியாகிவிட்டது. அதாவது இன்ஷாஅல்லாஹ் இதற்கான நற்கூலி நிச்சயம் கிடைக்கும்.

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஓர் இயல்பின் ஆற்றலை மாற்றிவிடுவதற்கு மார்க்கத்திற்கு அதிகாரம் இல்லை. ஆயினும், அதனை உரிய இடத்தில் பயன்படுத்துவதற்காக வழிகாட்டுவது மார்க்கத்தின் பணியாகும். ஓர் ஆற்றலின் மீது மட்டும் அழுத்தம் கொடுக்கக் கூடாது. உதாரணமாக, கருணை அல்லது மன்னிப்பின் மீது மட்டும் அழுத்தம் கொடுக்கக் கூடாது. மாறாக, அனைத்து ஆற்றல்களையும் பயன்படுத்துவதற்கு வலியுறுத்த வேண்டும் - ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள்**

**அஹ்மதி அல்லாத முஸ்லிம்களிடத்தில் ஏராளமான பித்அத்களுக்கான வழிகள் உருவாகிவிட்டன. ஆனால், சில அஹ்மதிகளும் அதன் தாக்கத்தின் கீழ் வந்துவிட்டனர். எனவே நாம் விலகியிருக்க வேண்டும். திருக்குர்ஆனின் மொழியாக்கம் மற்றும் தஃப்ஸீர்களை படிப்பதன் பக்கம் அதிக கவனம் செலுத்த வேண்டும்**

**பெரும்பாலான பாமர முஸ்லிம்கள் அறிவீனர்களாக உள்ளனர். பெயர் தாங்கி ஆலிம்கள் அவர்களை எந்த பக்கம் அழைத்து செல்கின்றார்களோ அந்தப் பக்கம் அவர்கள் செல்கின்றனர். மேலும் பித்அத்கள் பரவிக் கொண்டே செல்கின்றன. ஆனால் அதன் பிறகும் கூட நாம் திருக்குர்ஆனில் மாற்றம் செய்கின்றோம் என்று நம் மீது பழிசுமத்தப்படுகின்றது**

**முஸ்லிம்களின் முன்னேற்றம் திருக்குர்ஆனுடைய நிபந்தனைகளுக்குட்பட்டது**

**திருக்குர்ஆன் ஆபரணப் பை ஆகும்**

**திருக்குர்ஆனிற்கு எதிராக எந்தவொரு மாயவித்தையும் நிலை நிற்க முடியாது**

**நிச்சயமாக நினைவிற் கொள்ளுங்கள்: திருக்குர்ஆன் எப்படிப்பட்ட மகத்துவ மிக்க ஆயுதம் என்றால் அதற்கு முன்னால் எந்த ஒரு பொய்யுக்கும் நிலைபெற்றிருப்பதற்கு தைரியம் இருக்க முடியாது**

## ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

(அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 17 மார்ச் 2023** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ஆண்டு **அமான்** மாதம் **17ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۝ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۝ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ۝
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۝
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۝

திருக்குர்ஆனின் அந்தஸ்து, மகத்துவம் மற்றும் அழகு ஆகியவை கடந்த சில வாரங்களாக எடுத்துரைக்கப்பட்டு வருகின்றன. திருக்குர்ஆனைப் பொருத்தவரை மார்க்கத்தின் அந்தஸ்து என்ன? மேலும் மனித ஆற்றல் மீது அதன் தாக்கம் என்ன? மேலும் (அதன் தாக்கம்) என்னவாக இருக்க வேண்டும்? போன்ற விஷயங்களை விளக்கியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

மனித ஆற்றல் மீது மார்க்கத்தின் தாக்கம் என்ன? என்ற கேள்விக்கு இன்ஜீல் எந்த பதிலும் கொடுக்கவில்லை. ஏனெனில், இன்ஜீல் நுட்பமான ஞானத்தின் வழிகளிலிருந்து தொலைவில் உள்ளது. ஆனால், திருக்குர்ஆன் மிகவும் விளக்கமாக மீண்டும், மீண்டும் இந்த விவகாரத்தை தீர்த்து வைக்கின்றது. மனிதர்களின் இயல்புகளின் ஆற்றலை மாற்றுவதும், ஓநாயை ஆடாக மாற்றிக் காட்டுவதும் மார்க்கத்தின் அந்தஸ்து அல்ல. அதாவது வலிமை வாய்ந்தவரை முற்றிலும் பலவீனமானவராக ஆக்கிக் காட்டுவது மார்க்கத்தின் பணியல்ல. இன்னும் கூறப்போனால், மார்க்கத்தின் நோக்கம் இது மட்டுமே ஆகும். அதாவது, மனிதனுக்குள் என்னென்ன ஆற்றலும், திறமையும் இருக்கின்றனவோ, மேலும் அல்லாஹ் அவனுக்கு எவற்றை வழங்கியுள்ளானோ அவற்றை அவற்றிற்குரிய இடத்திலும், சந்தர்ப்பத்திலும் பயன்படுத்துவதற்காக வழிகாட்டுவதே ஆகும். ஓர் இயல்பின் ஆற்றலை மாற்றிவிடுவதற்கு மார்க்கத்திற்கு அதிகாரம் இல்லை. ஆயினும், அதனை உரிய இடத்தில் பயன்படுத்துவதற்காக வழிகாட்டுவது மார்க்கத்தின் பணியாகும். ஓர் ஆற்றலின் மீது மட்டும் அழுத்தம் கொடுக்கக் கூடாது. உதாரணமாக, கருணை அல்லது மன்னிப்பின் மீது மட்டும் அழுத்தம் கொடுக்கக் கூடாது. மாறாக, அனைத்து ஆற்றல்களையும் பயன்படுத்துவதற்கு வலியுறுத்த வேண்டும். கருணை மட்டுமே காட்டுங்கள். மன்னியுங்கள் என்று கூறக்கூடாது. மாறாக, தேவைக்கேற்ப எந்த விஷயத்திற்கு அந்த இடத்தில் தேவை இருக்குமோ அதனை பயன்படுத்துவதற்கு அறிவுறுத்த வேண்டும். அசல் நோக்கம் சீர்திருத்தம் மற்றும் மேன்மை ஆகும். இந்த நோக்கம் எவ்வாறு முழுமையடைந்தாலும் அதனை செய்வதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

கூறுகின்றார்கள்: கருணை அல்லது மன்னிப்பின் மீது மட்டுமே அழுத்தம் கொடுத்தல் கூடாது. மாறாக, அனைத்து ஆற்றல்களையும் பயன்படுத்துவதற்காகவும் வழிகாட்ட வேண்டும். ஏனெனில், மனித ஆற்றல்களில் எந்தவோர் ஆற்றலும் தீயதல்ல. மாறாக, வரம்பு மீறுதல், தேவையை விட குறைவு செய்தல் மற்றும் தவறான பயன்பாடு ஆகியவையே தீயதாகும். எந்த நபர் கண்டனத்திற்குரியவராக இருக்கின்றாரோ அவர் வெறும் இயல்பின் ஆற்றலின் காரணமாக கண்டனத்திற்குரியவராக இருப்பதில்லை. மாறாக, அவற்றின் தவறான பயன்பாட்டின் காரணமாக அவர் கண்டனத்திற்குரியவராக இருக்கின்றார். (ஸிராஜுத்தீன் ஈஸாயீ கே சார் சவாலோன் கா ஜவாப், ரூஹானீ கஸாயீன், தொகுதி 12, பக்கம் 340 - 341)

ஒரு சிறிய உதாரணம் இதுவாகும். அதாவது, ஒருவர் பௌதீக ரீதியில் வலிமை வாய்ந்தவராக இருக்கின்றார். அவர் தனது வலிமையை வெளிப்படுத்துவதற்காக அநீதி மட்டுமே செய்து கொண்டிருக்கின்றார் அல்லது அதிகாரம் படைத்தவராக இருக்கும் ஒருவர் அநீதியே இழைத்துக் கொண்டிருக்கின்றார். மேலும் மற்றவர்களிடம் அவர் மென்மையான உள்ளத்தை வெளிப்படுத்தவில்லையென்றால், மேலும் இடம், காலத்திற்கு ஏற்ப தனது ஆற்றலை அவர் வெளிப்படுத்தவில்லையென்றால், இன்னும் கூறப்போனால், தனது மேன்மையை நிறுவுவதும், ஆதிக்கத்தை நிலைநாட்டுவதுமே அவரது நோக்கமாக இருக்குமென்றால் பின்னர் அது போன்ற நபர் தீயவர் என்றழைக்கப்படுவார். அவரது ஆற்றல்கள் தீயவை அல்ல. ஆனால், அதன் பயன்பாடு தீயதாகும். அவரது செயல் தீயதாகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வருகையின் நோக்கம் திருக்குர்ஆனின் உண்மைத்துவத்தை நிரூபணம்

செய்வதும், நிலைநாட்டுவதும் ஆகும்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: இந்த விஷயம் உண்மையாகும். அதாவது இந்த முஸ்லிம்கள் திருக்குர்ஆனை முற்றிலும் புரிவதில்லை. ஆனால், திருக்குர்ஆனின் சரியான பொருளை வெளிப்படுத்த தற்போது இறைவன் எண்ணம் கொண்டுள்ளான். இறைவன் என்னை அதற்காகவே அனுப்பியுள்ளான். மேலும் நான் அவனது இல்ஹாம் மற்றும் வஹீயின் மூலமாக திருக்குர்ஆனை புரிகின்றேன். திருக்குர்ஆன் எப்படிப்பட்ட போதனை என்றால் அதன் மீது எந்த ஆட்சேபனையும் செய்ய முடியாது. அது பகுத்தறிவால் நிறைந்திருக்கின்றது. எந்த ஒரு தத்துவஞானிக்கும் ஆட்சேபனைக்கு சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. (மல்ஃபூஸாத், தொகுதி 6, பக்கம் 167, பதிப்பு- 1987 ஆம் ஆண்டு)

அடுத்து, திருக்குர்ஆனின் மகத்துவத்தை எடுத்துரைத்தவாறு அன்னார் (அலை) ஜமாஅத்திற்கு அறிவுரை செய்கின்றார்கள்: திருக்குர்ஆனை சீர்தூக்கிப் பாருங்கள். அதில் அனைத்தும் உள்ளன. நன்மைகள் மற்றும் தீமைகளின் விளக்கம் உள்ளது. எதிர்காலத்தைப் பற்றிய செய்திகள் போன்றவை உள்ளன. நன்றாக புரிந்து கொள்ளுங்கள். அது எப்படிப்பட்ட மார்க்கத்தை முன்வைக்கின்றது என்றால், அதன் மீது எந்த ஆட்சேபனையும் செய்ய முடியாது. ஏனெனில், அதன் அருட்களும், கனிகளும் புத்தம் புதிதாக கிடைக்கின்றன. இன்ஜீலில் மார்க்கத்தைக் குறித்து முழுமையாக எடுத்துரைக்கப்படவில்லை. அதன் போதனை அந்தக் காலத்தின் நிலைமைக்கு ஏற்புடையதாக இருக்கக்கூடும். ஆனால், அது நிரந்தமானது மற்றும் எல்லா நிலைமைகளுக்கும் பொருத்தமானது என்பது ஒருபோதும் கிடையாது.

எந்தக் காலத்தில் ஹஸ்ரத் ஈஸா (அலை) வந்தார்களோ அந்தக் காலத்தின் தேவைக்கேற்புடையதாக அது இருந்தது. ஆனால், தற்போதைய காலத்திற்கு (அது பொருத்தமானது) கிடையாது. இந்த பெருமிதம் திருக்குர்ஆனிற்கு மட்டுமே கிடைத்துள்ளது. அதாவது, அல்லாஹ் அதில் எல்லா நோய்க்கும் சிகிச்சையை கூறியுள்ளான். மேலும், எல்லா ஆற்றலுக்கும் தர்பிய்யத் வழங்கியுள்ளது. வெளிப்படையான தீமையை அகற்றுவதற்குரிய வழிமுறையையும் கூறியுள்ளது. எனவே திருக்குர்ஆனை ஓதிக் கொண்டிருங்கள். மேலும் துஆ செய்து கொண்டிருங்கள். மேலும் உங்களது நடத்தைகளை அதன் போதனைக்கேற்ப ஆக்கிக் கொள்வதற்கு முயற்சி செய்யுங்கள். (மல்ஃபூஸாத், தொகுதி 9, பக்கம் 122, 1984 ஆம் ஆண்டு பதிப்பு)

திருக்குர்ஆனை சீர்தூக்கிப் பார்ப்பதன் பக்கம் கவனமூட்டியவாறு அன்னார் (அலை) தொடர்ந்து கூறுகின்றார்கள்: (தீய) சடங்குகள் மற்றும் பித்அத்துகளிலிருந்து விலகியிருப்பது சிறந்தது ஆகும். பித்அத்துகள் மூலம் மெது மெதுவாக ஷரீஅத்தில் மாறுதல்கள் உருவாகிவிடும். சிறந்த வழிமுறை என்னவென்றால், அதுபோன்ற தவறான மந்திரங்களில் அவர் செலவிடும் நேரத்தை திருக்குர்ஆனை சீர்தூக்கிப் பார்ப்பதில் கழிக்கட்டும். (மல்ஃபூஸாத், தொகுதி 6, பக்கம் 266, 1984 ஆம் ஆண்டு பதிப்பு)

வஸீஃபாக்கள் கூறுங்கள் என்று மக்கள் முயற்சி செய்கின்றனர். சிறிய விஷயத்தை கூறுங்கள். அந்நிலையில் அதன் மீது கவனம் இருக்கும். நாங்கள் அதில் நேரத்தை செலவிடுவோம் என்று கூறினர்.

அன்னார் (அலை) கூறினார்கள்: இல்லை! திருக்குர்ஆனை சீர்தூக்கிப் பார்ப்பதில் நேரத்தை செலவிடுங்கள். சில மக்கள் வஸீஃபாக்களிலேயே நேரத்தை செலவிட்டவாறு காலத்தை கடத்துகின்றனர். அவர்கள் என்ன வஸீஃபாக்கள் மற்றும் திக்ருகளை செய்து வருகின்றனரோ அவற்றின் பொருள் கூட அவர்களில் பலருக்கு தெரிவதில்லை. மேலும், இவை நமது ஆன்மிக உயர்வுக்கான ஒரே வழிமுறையாகும் என்று அவர்கள் கருதுகின்றனர்.

அன்னார் (அலை) கூறினார்கள்: அவற்றிற்கு பகரமாக திருக்குர்ஆனை சிந்தித்துப் பார்ப்பதிலும், சீர்தூக்கிப் பார்ப்பதிலும் நீங்கள் நேரத்தை செலவிட்டால் அது மிகச் சிறந்ததாகும். நீங்கள் அதன் மூலமே ஆன்மிக முன்னேற்றத்தை பெற்றுக் கொள்ள முடியும். அஹ்மதி அல்லாத முஸ்லிம்களிடத்தில் ஏராளமான பித்அத்களுக்கான வழிகள் உருவாகிவிட்டன. ஆனால், சில அஹ்மதிகளும் அதன் தாக்கத்தின் கீழ் வந்துவிட்டனர். எனவே நாம் விலகியிருக்க வேண்டும். திருக்குர்ஆனின் மொழியாக்கம் மற்றும் தஃப்ஸீர்களை படிப்பதன் பக்கம் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

அடுத்த வாரம் வியாழக்கிழமையிலிருந்து சில இடங்களில் இன்ஷா அல்லாஹ் ரமலானும் ஆரம்பமாகிவிடும். எனவே இந்த ரமலானில் நாம் குறிப்பாக திருக்குர்ஆனை ஓதுவதற்கும், கற்றுக் கொடுப்பதற்கும் புரிவதற்கும் முயற்சி செய்ய வேண்டும்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: உள்ளம் கடினமானதாக இருக்கின்றதென்றால் அதனை மென்மையாக்குவதற்கான வழிமுறை இதுவே ஆகும். அதாவது திருக்குர்ஆனையே மீண்டும், மீண்டும் ஓதுங்கள். எங்கெல்லாம் துஆ வருகின்றதோ அங்கு அதே இறை கருணை தமக்கும் கிடைக்க வேண்டும் என்று நம்பிக்கையாளரின் உள்ளமும் விரும்புகின்றது.

திருக்குர்ஆனின் உதாரணம் ஒரு தோட்டத்தை போன்றதாகும். ஓரிடத்திலிருந்து மனிதன் ஒரு வகையான பழத்தை தேர்ந்தெடுக்கின்றான். பின்னர் மேலும் முன்னேறிச் சென்று வேறு வகையான கனியை தேர்ந்தெடுக்கின்றான். எனவே ஒவ்வொரு இடத்திலிருந்தும் அதற்குரிய பயனை அடைந்து கொள்ள வேண்டும். (மல்ஃபூஸாத், தொகுதி 6, பக்கம் 266, 1984 ஆம் ஆண்டு பதிப்பு)

அன்னார் (அலை) கூறினார்கள்: ஏவல்கள் மற்றும் விலக்கல்களை மனிதன் தன்னகத்தே பேணி நடப்பதன் மூலம் ஆன்மிக முன்னேற்றம் கிடைக்கின்றது.

எவற்றை செய்வதற்கு அல்லாஹ் கட்டளையிட்டுள்ளானோ அவற்றை செய்ய வேண்டும். எவற்றிலிருந்து தடுத்துள்ளானோ அவற்றிலிருந்து விலகியிருப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். இந்த விஷயத்தை பார்க்க வேண்டும். அந்த தோட்டத்திலிருந்து மனிதன் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் மலர்கள் என்பது இவையே ஆகும்.

அன்னார் (அலை) கூறினார்கள்: சில மக்கள் தமது அறிவின் வட்டத்தில் இந்த அளவிற்கு முன்னேறிவிட்டனர். அதாவது, திருக்குர்ஆனுடைய சில சூராக்கள் உள்ளன. அன்னார் (அலை) சூரா யாஸீனுடைய உதாரணத்தை கொடுத்துள்ளார்கள். அதாவது அதனை இன்ன வழிமுறையில் ஓதினால் பரக்கத் கிடைக்கும். இல்லையென்றால் கிடைக்காது என்று அது தொடர்பாக (சிலர்) கூறுகின்றார்கள். ( மல்ஃபூஸாத், தொகுதி 6, பக்கம் 266, 1984 ஆம் ஆண்டு பதிப்பு)

இந்த விஷயங்கள் இறை வாதங்கள் ஆகும். எனவே இதுபோன்ற விஷயங்களிலிருந்து நாம் குறிப்பாக விலகியிருக்க வேண்டும்.

திருக்குர்ஆனை புறக்கணிக்கின்ற இரண்டு வழிமுறைகள் உள்ளன என்பதை அன்னார் (அலை) விளக்கியவாறு கூறுகின்றார்கள்: திருக்குர்ஆனை புறக்கணிக்கின்ற முதல் வகை என்பது வெளிப்படையான புறக்கணிப்பு என்பதாகும். இரண்டாவது வகை பொருள் அளவிலான புறக்கணிப்பு ஆகும். அதன் பொருள் என்ன?

புறக்கணிப்பதன் பொருள் என்னவென்றால், அதன்படி அமல் செய்யாமல் இருப்பது. ஒன்று

வெளிப்படையாக மனிதன் அமல் செய்வதில்லை அல்லது அதன் பொருளின் அடிப்படையில் அமல் செய்வதில்லை.

மனிதன் திருக்குர்ஆனை புறக்கணிக்கின்ற இரண்டு நிலைகளை அன்னார் (அலை) விளக்கியுள்ளார்கள்.

ஒன்று, பகிரங்கமானது மற்றொன்று பொருள் ரீதியிலானது ஆகும். சூரீ அதாவது பகிரங்கமான புறக்கணிப்பு என்பது இறை வேதத்தை ஓதாமலேயே இருப்பது. உதாரணமாக, முஸ்லிம்கள் என்று அழைக்கப்படக்கூடிய பெரும்பாலான மக்கள் இருக்கின்றனர். ஆனால், அவர்கள் திருக்குர்ஆனுடைய வாக்கியங்களை கூட முற்றிலும் அறியாதவர்களாக உள்ளனர். இரண்டாவது, பொருள் ரீதியிலானது. அதாவது இரண்டாவது நிலை என்னவென்றால், திருக்குர்ஆனை ஓதுவார்கள். ஆனால் திருக்குர்ஆனுடைய பரக்கத்துகள், ஒளிகள் மற்றும் இறையருட்கள் மீது அவர்கள் ஈமான் கொள்ளாதது ஆகும். எனவே இந்த இரண்டு வகையான புறக்கணிப்புகளில் எந்த புறக்கணிப்பாக இருந்தாலும் அதிலிருந்து விலகியிருக்க வேண்டும்.

அன்னார் (அலை) கூறினார்கள்: இமாம் ஜாஃபர் (ரஹ்) அவர்களின் கூற்றாகும். அது எந்தளவிற்கு சரியானது என்பதை அல்லாஹ்வே நன்கறிவான். நான் எந்த அளவிற்கு திருக்குர்ஆன் ஓதுகின்றேன் என்றால் அத்துடன் உடனே இல்ஹாம் இறங்க தொடங்கிவிடுகின்றது.

ஆனால் விஷயம் அறிவுப்பூர்வமானதாக தெரிகின்றது.

அன்னார் (அலை) கூறினார்கள்: இது சரியானதா? இல்லையா? என்பதை அல்லாஹ்வே நன்கறிவான். எனினும் இந்த விஷயம் அறிவுபூர்வமானதாக தெரிகின்றது.

அதாவது அவர் இதனைக் கூறினாரா? இல்லையா? என்பது தெரியவில்லை. எனினும் விஷயம் அறிவுப்பூர்வமானதாகும். ஏனெனில் ஒரு விஷயம் மற்றொரு விஷயத்தின் பக்கம் ஈர்க்கின்றது. தற்போது இக்காலத்தில் மக்கள் நூற்றுக்கணக்கான குறிப்புகளை எழுதி வைத்துள்ளனர். ஷியாக்கள் தனியாக, சுன்னத் ஜமாஅத்தைச் சார்ந்தவர்கள் தனியாக எழுதி வைத்துள்ளனர்.

ஒரு சம்பவத்தை எடுத்துரைத்தவாறு ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

நான் ஒரு வாக்கியம் கற்றுத் தந்துவிடுகின்றேன். அதனை நீங்கள் ஓதி வாருங்கள். பின்னர் சுத்தத்தை பேணுவதற்கும் வுளூ செய்வதற்கும் அவசியம் இருக்காது என்று ஒருமுறை ஒரு ஷியா நண்பர் எனது தந்தையிடம் கூறினார். உங்களுக்கு அந்த வாக்கியம் மட்டுமே போதுமானது. அதுவே வுளூ ஆகும். அதுவே தூய்மையை பேணுவதாகும் என்று அவர் கூறினார்.

கூறினார்கள்: இஸ்லாத்தில் நிராகரிப்பும், பித்அத்தும், மார்க்கமற்றத் தன்மை போன்ற விஷயங்களும் இவ்வாறே வந்துள்ளன. அதாவது இறை வேதத்திற்கு கொடுக்கப்பட வேண்டிய கண்ணியமும், மகத்துவமும் ஒரு நபரின் கூற்றிற்கு வழங்கப்பட்டுள்ளது. இதன் காரணமாகவே திருக்குர்ஆனை விட அந்தஸ்தில் குறைந்ததாக ஹதீஸ்களை கண்ணியத்திற்குரிய ஸஹாபிகள் கருதி வந்தனர்.

ஒரு சம்பவத்தை அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

அதாவது ஒருமுறை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தீர்ப்பு வழங்கத் தொடங்கினார்கள். அப்போது ஹதீஸில் இவ்வாறு உள்ளது என்று ஒரு மூதாட்டி எழுந்து கூறினார். அதாவது இந்த விஷயம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியது என்று அவர் கூறினார்.

இங்கு இதனையும் நினைவிற்கொள்ளுங்கள். அதாவது ஹதீஸ்கள் பிற்காலத்தில் ஒன்றுசேர்க்கப்பட்டிருந்தன. எனினும், சில ஸஹாபிகள் சிலமுறை எழுதியும் வைத்திருந்தனர்.

ஆக, அன்னார் (ரலி) கூறினார்கள். அதாவது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: ஒரு மூதாட்டிக்காக என்னால் அல்லாஹ்வின் வேதத்தை மறுதலிக்க இயலாது. (மல்ஃபூஸாத், தொகுதி 6, பக்கம் 266 - 277, 1984 ஆம் ஆண்டு காதியான் பதிப்பு)

அந்த அறிவிப்பு ஒரு பெண்மணியுடையது ஆகும். அவர் இதனை கூறுகின்றார். ஆனால், அல்லாஹ்வின் கூற்று அதிலிருந்து வேறுபட்டதாகும். அல்லாஹ்வின் வேதம் எதனைக் கூறுகின்றதோ அதுவே உண்மையாகும். எனவே இதுவே உண்மையாகும். அதனையே நாம் மேற்கொள்ள வேண்டும். இந்த விஷயத்தை பின்பற்றவில்லையென்றால் பின்னர் பித்அத்கள் பரவி விடும். இதன் காரணமாகவே இன்று முஸ்லிம்களிடத்தில் பித்அத்கள் பரவிக் கொண்டே செல்கின்றன. மேலும் இவ்வாறு திருக்குர்ஆனின் அசல் போதனையிலிருந்து அவர்களை பித்அத்கள் விலக்கிக் கொண்டிருக்கின்றன. நான் உதாரணமாக கூறியதுபோன்று இன்று பெரும்பாலான முஸ்லிம்களிடத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறிய இந்த விஷயங்கள் தென்படுகின்றன. அதாவது, ஒரு வாக்கியம் உள்ளது. அதனை ஓதி வாருங்கள். பின்னர் வுளூ செய்வதற்கும் அவசியம் இல்லை. சுத்தமாக இருப்பதற்கும் அவசியம் இல்லை என்று ஷியா ஆலிம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் தந்தையிடம் கூறினார். பெரும்பாலான பாமர முஸ்லிம்கள் அறிவீனர்களாக உள்ளனர். பெயர் தாங்கி ஆலிம்கள் அவர்களை எந்த பக்கம் அழைத்து செல்கின்றார்களோ அந்தப் பக்கம் அவர்கள் செல்கின்றனர். மேலும் பித்அத்கள் பரவிக் கொண்டே செல்கின்றன. ஆனால் அதன் பிறகும் கூட நாம் திருக்குர்ஆனில் மாற்றம் செய்கின்றோம் என்று நம் மீது பழிசுமத்தப்படுகின்றது.

முஸ்லிம்களின் முன்னேற்றம் திருக்குர்ஆனுடைய நிபந்தனைகளுக்குட்பட்டது என்ற விஷயத்தை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: எதுவரை முஸ்லிம்கள் திருக்குர்ஆனை முழுமையாகப் பின்பற்றியும், பேணியும் நடக்கமாட்டார்களோ அதுவரை அவர்கள் எவ்வகையிலும் முன்னேற்றம் அடைய முடியாது. எந்த அளவிற்கு அவர்கள் திருக்குர்ஆனிலிருந்து தொலைவில் விலகி செல்கின்றார்களோ அதே அளவிற்கு அவர்கள் முன்னேற்றத்திற்குரிய படித்தரங்கள் மற்றும் வழிகளிலிருந்து தொலைவில் விலகிச் சென்று கொண்டிருப்பார்கள். திருக்குர்ஆனின்படி அமல் செய்வதே முன்னேற்றம் மற்றும் நேர்வழிக்கான காரணி ஆகும். ஹலால் ஆன வியாபாரம், விவசாயம் மற்றும் வாழ்க்கைக்கான வழிமுறைகளிலிருந்து அல்லாஹ் தடுப்பதில்லை. ஆயினும், அதனையே தமது நோக்கமாக ஆக்கிக் கொள்ளக் கூடாது. இன்னும் கூறப்போனால், அவற்றை மார்க்கத்திற்கு தொண்டாற்றுவதற்கான வழிமுறையாக ஆக்கிக் கொள்ள வேண்டும். ஸகாத்தின் நோக்கமும் இதுவே ஆகும். அதாவது அந்த செல்வம் மார்க்கத்திற்கு தொண்டாற்றுவதாக இருக்க வேண்டும். (மல்ஃபூஸாத், தொகுதி 8, பக்கம் 29- 30, 1984 ஆம் ஆண்டு பதிப்பு)

எனவே உலகத்தை சம்பாதிப்பது மட்டுமே தமது வாழ்வின் நோக்கமாக ஒரு நம்பிக்கையாளர் ஆக்கிக் கொள்ளக் கூடாது. மாறாக, அல்லாஹ் மனித வாழ்வின் நோக்கமாக சிலவற்றை கூறியுள்ளான். அதாவது உண்மையான இறை வணக்கம் செய்பவராக இருத்தல், அல்லாஹ்வின் கட்டளைகளின்படி நடத்தல் ஆகியவற்றை நாம் தேட முயற்சி செய்ய வேண்டும். ஸகாத் மற்றும் இறைவனின் வழியில் செலவு செய்வதற்கான கட்டளையும் கூட இதனால் வழங்கப்பட்டுள்ளன. அதாவது, அந்த செல்வம் தமது விருப்பங்களை முழுமை செய்து கொள்வதற்காக மட்டுமே

இருத்தல் கூடாது. மாறாக, அவற்றை மார்க்கத்தின் முன்னேற்றம், அல்லாஹ்விற்குரிய உரிமைகளை செலுத்துதல், மற்றும் அல்லாஹ்வின் அடியார்களுக்குரிய உரிமைகளை செலுத்துதல் ஆகியவற்றிலும் செலவழிக்க வேண்டும்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: திருக்குர்ஆன் ஆபரணப் பை ஆகும். மக்கள் அதனைப் பற்றி அறியாதவர்களாக உள்ளனர்.

கூறினார்கள்: வேதனை என்னவென்றால், மக்கள் உத்வேகத்துடனும், துடிப்புடனும் திருக்குர்ஆனின் பக்கம் கவனம் செலுத்துவதில்லை. உலகவாதி தனது உலக விஷயங்களை அல்லது ஒரு கவிஞர் தனது கவிதைகளை எவ்வாறு ஆழ்ந்து சீர்தூக்கிப் பார்க்கின்றாரோ அவ்வாறு கூட திருக்குர்ஆன் சிந்தித்துப் பார்க்கப்படுவதில்லை.

கூறுகின்றார்கள்: பட்டாலாவில் ஒரு கவிஞர் இருந்தார். அவருடைய கவிதைகளின் தொகுப்பு நூல் ஒன்று உள்ளது. அவர் ஒரு முறை ஒரு கவிதை கூறினார். பாரசீகத்தில் அந்த கவிதை வரியை குறிப்பிட்டவாறு அன்னார் கூறுகின்றார்கள்: ஒரு கவிதை வரிக்காக அந்த கவிஞர் மிக அதிகமாக உழைத்துள்ளார். தற்போது மக்கள் ஒரு திருக்குர்ஆன் வசனத்தை புரிந்து கொள்வதற்காக அந்த அளவிற்கு உழைப்பதில்லை. கூறினார்கள்: திருக்குர்ஆன் ஆபரணப் பை ஆகும். மக்கள் அதனைப் பற்றி அறியாதவர்களாக உள்ளனர். (மல்ஃபூஸாத், தொகுதி 2, பக்கம் 343 - 344, 1984 ஆம் ஆண்டு பதிப்பு)

அடுத்து அன்னார் (அலை) கூறினார்கள்: எந்த அளவிற்கு இரகசியங்கள் திருக்குர்ஆனில் உள்ளனவோ அந்த அளவிற்கு தவ்ராத் மற்றும் இன்ஜீலில் எங்கே உள்ளது? அடுத்து, தவ்ராத் அல்லது இன்ஜீல் வாதமாக மட்டுமே விஷயங்களை எடுத்துரைப்பதுபோன்று திருக்குர்ஆன் அனைத்து விவகாரங்களையும் வெறும் வாதம் என்ற அளவில் மட்டும் எடுத்துரைப்பதில்லை. மாறாக, திருக்குர்ஆன் ஆதாரப்பூர்வமான சான்றுகளின் வடிவத்தைக் கொண்டுள்ளது. ஆதாரங்களின் வடிவத்தை கொண்டுள்ளது. ஒரு வலிமையான மற்றும் உறுதியான சான்றுகளை தம்முடன் கொண்டுள்ள விஷயத்தையே அது எடுத்துரைக்கின்றது. உதாரணமாக, எவ்வாறு திருக்குர்ஆனின் சொற்செறிவு மற்றும் பொருட்செறிவு தன்னகத்தே ஓர் ஈர்ப்பைக் கொண்டிருக்கின்றதோ. எவ்வாறு அதன் போதனையில் பகுத்தறிவும், ஈர்ப்பும் உள்ளதோ அதேபோன்று அதனுடைய சான்றுகளும் தாக்கம் மிகுந்தவையாக உள்ளன. (மல்ஃபூஸாத், தொகுதி 3, பக்கம் 243 -244, 1984 ஆம் ஆண்டு பதிப்பு)

ஆக, வேறு எந்த வேதமும் திருக்குர்ஆனுடன் போட்டியிட முடியாது. இது தொடர்பாக அன்னார் (அலை) தொடர்ந்து இதனையும் கூறுகின்றார்கள்: அதாவது, எவ்வாறு திருக்குர்ஆன் அனைத்து வேதங்களை விடவும் மேன்மை மிக்கதாக உள்ளதோ அதேபோன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் அனைத்து நபிமார்களை விடவும் மேன்மை மிக்கவர்கள் ஆவர். (மல்ஃபூஸாத், தொகுதி 3, பக்கம் 244, 1984 ஆம் ஆண்டு பதிப்பு)

எனவே நீங்கள் திருக்குர்ஆனை ஓதும்போது திருக்குர்ஆனில் நீங்கள் பார்க்கும் விஷயத்திற்கு அங்கேயே அதற்கான சான்றையும் தேடுங்கள்.

அடுத்து, திருக்குர்ஆனிற்கு எதிராக எந்தவொரு மாயவித்தையும் நிலை நிற்க முடியாது என்ற திருக்குர்ஆனின் இந்த சிறப்பைக் குறிப்பிட்டவாறு அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: நாம் திருக்குர்ஆனை முன்வைக்கின்றோம். அதன் மூலம் மாயவித்தை ஓடிவிடுகின்றது. அதற்கெதிரில் எந்தவொரு பொய்யும், வித்தையும் நிலைபெற முடியாது. நமது எதிரிகளின் கைகளில் என்ன உள்ளது? அவர்கள் எதனை தாங்கிக் கொண்டு திரிகின்றனர்? நிச்சயமாக நினைவிற் கொள்ளுங்கள்: திருக்குர்ஆன் எப்படிப்பட்ட மகத்துவ மிக்க ஆயுதம் என்றால் அதற்கு முன்னால் எந்த ஒரு பொய்யுக்கும் நிலைபெற்றிருப்பதற்கு தைரியம் இருக்க முடியாது. இதன் காரணமாக எந்தவொரு பொய்வாதியாலும் எமக்கு முன்பும், எமது ஜமாஅத்திற்கு முன்பும் நிற்க முடிவதில்லை. மேலும் உரையாடுவதற்கு மறுத்துவிடுகின்றனர். இது விண்ணின் ஆயுதம் ஆகும். அது ஒருபோதும் மழுங்கி விடாது. (மல்ஃபூஸாத், தொகுதி 5, பக்கம் 27, 1984 ஆம் ஆண்டு பதிப்பு)

எனவே நமக்கு இந்த விஷயம் கவனமூட்டுகின்றது. அதாவது நாம் திருக்குர்ஆனை சீர்தூக்கி சிந்தித்துப் பார்ப்பதன் பக்கம் அதிக கவனம் செலுத்த வேண்டும். அப்போதுதான் நமது ஆன்மிக மற்றும் அறிவார்ந்த நிலையிலும் மேன்மைபடுத்த முடியும். மேலும் எதிரிகளுக்கும் மறுப்பு கொடுக்க முடியும் என்று இந்த விஷயம் நமக்கு கவனமூட்டுகின்றது.

திருக்குர்ஆனைப் பின்பற்றி நடந்தால், திருக்குர்ஆனிற்கு முழுமையாக கட்டுப்பட்டால் இறைவன் கிடைக்கின்றான் என்ற விஷயத்தை எடுத்துரைத்தவாறு அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: நமது ஒரேயொரு தூதர் மட்டுமே உள்ளார். ஒரேயோரு திருக்குர்ஆன் வேதம் மட்டுமே அந்த தூதர் (ஸல்) மீது இறங்கியுள்ளது. அதனை பின்பற்றி நடப்பதனால் நாம் இறைவனை அடைய முடியும். இன்றைய காலத்தில் ஃபக்கீர்மார்கள் உருவாக்கி வைத்துள்ள வழிமுறைகள் மற்றும் பீர்மார்கள் உருவாக்கி வைத்துள்ள மாந்திரீகங்கள் இருக்கின்றன. (மாந்திரீகங்கள் என்பது ஒருவருக்கு தீங்கை ஏற்படுத்துவதற்காக நாற்பது நாட்கள் வரை தொடர்ந்து கூறப்படும் மந்திரம் அல்லது வஸீஃபாக்களுக்கு கூறப்படும்)

கூறினார்கள்: இந்த ஸைஃபாக்கள், பீர்மார்கள் உருவாக்கி வைத்துள்ள துஆக்கள் மற்றும் வஸீஃபாக்கள் இவை அனைத்தும் மனிதனை நேரான வழியிலிருந்து வழிதவறச் செய்வதற்கான கருவிகள் ஆகும். எனவே நீங்கள் அவற்றிலிருந்து விலகிக் கொள்ளுங்கள். அந்த மக்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் காத்தமுல் அன்பியாவாக இருக்கின்ற முத்திரையை உடைக்க விரும்பினர். ஒருவகையில் தங்களுக்கென்று தனியான ஒரு ஷரீஅத்தை உருவாக்கிக் கொண்டனர். நீங்கள் நினைவிற்கொள்ளுங்கள். திருக்குர்ஆன் மற்றும் இறைத் தூதர் (ஸல்) அவர்களின் கூற்றை பின்பற்றி நடப்பதும் தொழுகை, நோன்பு போன்ற சுன்னத்தான வழிமுறைகளை தவிர இறைவனுடைய அருள் மற்றும் பரக்கத்துகளின் கதவுகளை திறப்பதற்கு வேறு எந்த ஒரு திறவுகோலுமே இல்லை. இந்த வழிகளை விட்டு விட்டு வேறு ஒரு புதிய வழியை உருவாக்கிக் கொள்பவர் தவறிழைத்துள்ளார்.

அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் கூற்றுகளை பின்பற்றாதவர் இன்னும் கூறப்போனால் வேறு வழிகளில் இறைவனை தேடக்கூடிய அந்த நபர் தோல்வியுற்ற நிலையில் மரணிப்பார். (மல்ஃபூஸாத், தொகுதி 5, பக்கம் 125, 1984 ஆம் ஆண்டு பதிப்பு)

ஒவ்வொரு சமுதாயத்தின் தூதர் மீதும் நம்பிக்கை கொள்வதை திருக்குர்ஆன் கட்டாயமாக்கியுள்ளது என்ற திருக்குர்ஆனின் ஒரு சிறப்பை அன்னார் (அலை) எடுத்துரைத்தவாறு கூறினார்கள்: திருக்குர்ஆன் எப்படிப்பட்ட மகத்துவ மிக்க வேதம் என்றால் அது சமுதாயங்களுக்கு மத்தியில் சமாதானத்திற்கான அடித்தளத்தை அமைத்துள்ளது. மேலும், எல்லா சமுதாயத்தின் தூதர்களையும் ஏற்றுக் கொண்டுவிட்டது. மேலும் முழு உலகிலும் இந்த பெருமை திருக்குர்ஆனுக்கு மட்டுமே கிடைத்துள்ளது. திருக்குர்ஆன் உலகம் தொடர்பாக நமக்கு

لَا نُفَرِّقُ بَيْنَ اَحَدٍ مِّنْهُمْ وَ نَحْنُ لَهٗ مُسْلِمُوْنَ

என்ற போதனையை நல்கியுள்ளது. பொருள்: முஸ்லிம்களே! நாங்கள் உலகின் அனைத்து நபிமார்களின் மீது நம்பிக்கை

கொள்கின்றோம் என்று கூறுங்கள். மேலும் அவர்களில் சிலரை ஏற்றுக் கொள்கின்றோம். சிலரை மறுக்கின்றோம் என்று எந்த பிரிவினையையும் அவர்களிடத்தில் நாங்கள் ஏற்படுத்துவதில்லை என்றும் கூறுங்கள். (ஆலிஇம்ரான்: 85)

அன்னார் (அலை) அறைகூவல் விடுத்தார்கள்: இதுபோன்ற சமாதானத்தை ஏற்படுத்தும் வேறு ஒரு இல்ஹாமிய வேதம் உள்ளதென்றால் அதன் பெயரை கூறுங்கள். (பைகாமே சுல்ஹ், ரூஹானி கஸாயீன், தொகுதி 23, பக்கம் 459)

திருக்குர்ஆனின் சிறப்புகளில் ஒரு சிறப்பு இதுவாகும். அதாவது, திருக்குர்ஆனில் வெளிப்படையான வரிசைகிரமத்திற்கான பேணுதல் உள்ளது. அது தொடர்பாக அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: திருக்குர்ஆன் வெளிப்படையான வரிசைக்கிரமத்திற்கான கடுமையான பேணுதலை கொண்டுள்ளது. திருக்குர்ஆனின் சொற்செறிவின் ஒரு பெரும் பகுதிக்கு இதனுடனேயே தொடர்பு உள்ளது. அதற்குரிய காரணம் இதுவாகும். அதாவது வரிசைக்கிரமத்தை கருத்தில் கொள்வதும் சொற்செறிவின் காரணங்களில் ஒன்றாகும். இன்னும் கூறப்போனால் உயர் தரமான சொற்செறிவும் இதுவே ஆகும். அது நுட்பமான வடிவத்தை தன்னகத்தே கொண்டுள்ளது. எந்த நபரின் கூற்றில் வரிசைக்கிரமம் இருக்காதோ அல்லது குறைவாக இருக்குமோ அதுபோன்ற நபரை பேச்சாற்றல் மிக்கவர் என்று நம்மால் ஒருபோதும் கூறமுடியாது. அதாவது கருத்தை உரிய சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறும், அந்தக் கருத்தை உள்ளடக்கியவாறு முழுமையான விஷயத்தை எடுத்துரைப்பவராகவும் இருப்பவரே பேச்சாற்றல் மிக்கவர் ஆவார். பேச்சாற்றல் மிக்கவராகவும் அழகிய அர்த்தங்களை எடுத்துரைக்கக் கூடிய அழகிய சொற்களை பயன்படுத்துபவராகவும் இருக்க வேண்டும். சொற்களின் வரிசைக்கிரமமும் அவற்றில் இருக்க வேண்டும்.

எனவே அன்னார் (அலை) கூறினார்கள்: அதுபோன்ற நபரை பேச்சாற்றல் மிக்கவர் என்று ஒருபோதும் நம்மால் கூறமுடியாது. இன்னும் கூறப்போனால், ஒருநபர் எல்லை மீறி அதிகமாக வரிசைக்கிரமத்தை கருத்தில் கொள்வதை நீக்கி விட்டால் பின்னர் அந்த நபர் நிச்சயமாக பைத்தியக்காரராக இருப்பார். ஏனெனில், எவருடைய சொற்பொழிவு கட்டுக்கோப்பானதாக இல்லையோ அவரது சுயநினைவும் கட்டுக்கோப்பானதல்ல. வரிசைக்கிரமம் இல்லையென்றால் அதில் எந்த தொடர்பும் இருக்காது. பின்னர் அதன் பொருள் என்னவென்றால் அவர் பைத்தியம் ஆவார். அவர் மனநிலை பாதிக்கப்பட்டவர் ஆவார். அந்நிலையில் இந்த விஷயம் எவ்வாறு சாத்தியமாகும். அதாவது, இறைவனின் அந்த பரிசுத்த வேதம் சொற்செறிவிற்கான வாதத்தை செய்து எல்லா வகையான உண்மையின் பக்கமும் அழைக்கின்றது. அப்படிப்பட்ட தனித்தன்மை மிக்க வேதத்தில் சொற்செறிவின் அவசியமான அங்கமான வரிசைக்கிரமம் அதில் காணப்படவில்லை என்பது எப்படி சாத்தியமாகும். (தர்யாகுல் குலூப், ரூஹானி கஸாயீன், தொகுதி 15, பக்கம் 456 -457, அடிக்குறிப்பு)

எனவே திருக்குர்ஆன் என்பது அல்லாஹ்வின் வேதம் ஆகும். அது சொற்செறிவு மற்றும் சொல்வன்மையால் நிறைந்துள்ளது. அதில் வரிசைக்கிரமம் இல்லை என்பது சாத்தியமே இல்லாத விஷயம் ஆகும். ஆட்சேபனை செய்யக்கூடிய சிலர் அவ்வாறு ஆட்சேபனை செய்கின்றனர்.

திருக்குர்ஆனின் இரண்டு அற்புதங்களை குறிப்பிட்டவாறு அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: விண்ணின் ஒளிகளை பெறுவதற்கு திருக்குர்ஆனை தவிர்த்து வேறு எந்த வழிமுறையும் இல்லை. உண்மை மற்றும் பொய்க்கிடையில் நிரந்தரமான தனித்தன்மை நிலை பெற்றிருக்க வேண்டும். மேலும் எந்தக் காலத்திலும் பொய் உண்மையுடன் போட்டிபோட முடியாமல் இருக்க வேண்டும் என்ற நோக்கத்திற்காக இறைவன் முஹம்மதிய்ய சமுதாயத்திற்கு காலத்தின் இறுதி வரை இந்த இரண்டு அற்புதங்களை வழங்கியுள்ளான். அதாவது திருக்குர்ஆன் வேதத்தின் தனித்தன்மை மற்றும் திருக்குர்ஆன் வேதத்தின் தாக்கத்தின் தனித்தன்மை என்ற இரண்டு அற்புதங்களை இறைவன் வழங்கியுள்ளான். அதாவது ஒன்று திருக்குர்ஆனின் அற்புதம் மற்றொன்று வேதத்தின் தனித்தன்மை ஆகும்; மற்றொன்று அந்த வேதத்தின் தாக்கத்தின் தனித்தன்மை ஆகும். அதனை எதிர்கொள்வதிலிருந்து பொய் மார்க்கங்கள் தொன்றுதொட்டே தோல்வியுற்று வருகின்றன. வேதத்தின் தனித்தன்மை மட்டுமே திருக்குர்ஆனின் அற்புதமாக இருந்திருந்தால் மேலும் தாக்கத்தின் தனித்தன்மை திருக்குர்ஆனின் அற்புதமாக இல்லாமல் இருந்திருந்தால் பின்னர் கருணைக்குரிய முஹம்மதிய்ய சமுதாயத்திற்கு தாக்கங்கள் மற்றும் ஈமானிய ஒளிகளில் என்ன சிறப்பு இருக்க முடியும்? ஏனெனில் துறவியும், உலக விவகாரங்களிலிருந்து தம்மை விலக்கிக் கொண்டவரும் அற்புதத்தின் உச்சத்தை அடைய முடியாது. (பராஹீனே அஹ்மதிய்யா, ரூஹானீ கஸாயீன், தொகுதி 1, பக்கம் 292 -293, அடிக்குறிப்பு)

உண்மையான முறையில் திருக்குர்ஆனை பின்பற்றி நடந்தால் திருக்குர்ஆனின் போதனையின் மூலம் தாக்கமும் ஏற்படுகின்றது.

அடுத்து, திருக்குர்ஆனை பின்பற்றி நடப்பதன் மூலம் இம்மையில் வெளிப்படும் இரட்சிப்பின் தாக்கங்களைக் குறித்து அன்னார் (அலை) கூறினார்கள்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை பின்பற்றுதலை அடிப்படையாக கொண்டுள்ள திருக்குர்ஆன் எனும் வேதம் எப்படிபட்ட வேதம் என்றால் அதனை பின்பற்றுவதன் மூலமாக இரட்சிப்பின் தாக்கங்கள் வெளிப்படுகின்றன. ஏனெனில், இரண்டு வழிமுறைகள் மூலமாக வெளிப்படையான மறைமுகமான வழிமுறையில் குறைபாடான உள்ளங்களை முழுமையான அந்தஸ்து வரை சென்றடையச் செய்துவிடுகின்றது. ஐயங்கள் மற்றும் சந்தேகங்களிலிருந்து விடுதலை வழங்குகின்றது. எந்த மக்களிடம் உள்ளங்கள் குறைபாடுடையதாக உள்ளனவோ அதாவது எவர்களிடம் குறைபாடு உள்ளதோ அவற்றின் குறைகளை, பலவீனங்களை திருக்குர்ஆன் அகற்றுவது மட்டுமல்ல மாறாக, உயர் தரமான அந்தஸ்து வரை சென்றடையச் செய்கின்றது.

கூறினார்கள்: புறவழிமுறைகளின் மூலமாக இவ்வாறு நிகழ்கின்றது. அதாவது அதன் கூற்றுகள் முழுமையாகவும், உண்மையாகவும் இருக்கின்றன. மேலும் இறைவன் வரை சென்றடைவதை தடுக்கக்கூடிய ஏராளமான சந்தேகங்களும், ஐயங்களும் உலகில் இருக்கின்றன. மேலும் அவற்றில் மூழ்கி நூற்றுக்கணக்கான பிரிவுகள் பரவிக் கொண்டிருக்கின்றன. நூற்றுக்கணக்கான பொய்யான, வழிகேடான சிந்தனைகள்

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

மக்களின் உள்ளங்களில் உறைந்து கொண்டிருக்கின்றன. அவை அனைத்திற்கும் பகுத்திறிவு ரீதியிலான மறுப்பு திருக்குர்ஆனில் உள்ளது.

திருக்குர்ஆன் எந்த அளவிற்கு தெளிவாக சான்றுகளையும், தத்துவங்களையும் எடுத்துரைக்கின்றதென்றால் அனைத்து சந்தேகங்களையும் அது நீக்கி விடுகின்றது. ஆயினும் புரிவதற்கான நிபந்தனை உள்ளது. புரிவதற்காக புரிய வைக்கக்கூடியவரின் நூல்களிலிருந்து பயனடையது அவசியமாகும்.

கூறினார்கள்: இருள் நிறைந்த தற்காலத்தில் உண்மையான மற்றும் முழுமையான போதனையின் ஒளி தேவைப்படுகின்றது. அவை அனைத்தும் சூரியனைப் போன்று இதில் ஒளிவீசுகின்றது.

தற்போதைய காலத்திலும் இருள் பரவிக் கொண்டிருக்கின்றது. மார்க்கத்திலிருந்து விலகல் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. வெட்கமற்றத் தன்மை உள்ளது. வீணானவைகள் உள்ளன. இறைவனிடமிருந்து விலகியுள்ளனர். இவை அனைத்தும் இருள்கள் ஆகும். அவற்றை நீக்குவதற்காகவும், ஒளியைப் பெறுவதற்காகவும் திருக்குர்ஆனின் பக்கம் திரும்புங்கள். அதில் இவை அனைத்தும் காணப்படுகின்றன.

கூறினார்கள்: இவை அனைத்தும் சூரியனைப் போன்று இதில் ஒளிவீசிக் கொண்டிருக்கின்றன. இதில் சூரியனைப் போன்று ஒளிமயமாக உள்ளது. மேலும் அனைத்து மனநோய்களுக்கான சிகிச்சையும் இதில் இடம்பெற்றுள்ளன. அனைத்து உண்மையான இறை ஞானங்களின் கூற்றுகளும் அதில் நிறைந்துள்ளன. எதிர்காலத்தில் ஒருநேரத்தில் வெளிப்படக் கூடிய, அதேநேரம் இதிலிருந்து விடுபட்டுவிட்ட எந்த ஒரு இறை ஞானம் மிக்க கருத்தும் இல்லை.

மறைமுகமான வழிமுறை இந்த வகையில் அமைந்துள்ளது. அதாவது, அதனை முழுமையாக பின்பற்றி நடப்பது உள்ளத்தை மிகவும் தூய்மைப்படுத்திவிடுகின்றது. முழுமையாக பின்பற்றி நடத்தல் என்பது அதற்கான நிபந்தனை ஆகும். முழுமையான பின்பற்றுதல் இருந்தால் பின்னர் அது உள்ளத்தை எந்த அளவிற்கு தூய்மைப்படுத்தி விடுகின்றது என்றால், மனிதன் உள்ளார்ந்த அழுக்குகளிலிருந்து முற்றிலும் தூய்மையடைந்து உயர்வான இருப்புடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டு விடுகின்றான். அதாவது அல்லாஹ்வுடன் ஒரு தொடர்பு உருவாகி விடுகின்றது. ஒப்புக் கொள்ளப்படுதலுக்கான ஒளிகள் அவன் மீது இறங்கத் தொடங்கிவிடுகின்றன. இறை அருட்கொடைகள் அவரை எந்த அளவிற்கு சூழ்ந்து கொள்கின்றன என்றால், அவர் கடினங்களின் நேரத்தில் துஆ செய்கின்றார். அப்போது அல்லாஹ்வின் உயர் தரமான கருணையும், பரிவும் அதாவது பெரும் கருணையும், பரிவும் அவருக்கு கிடைக்கின்றது. இறைவன் மாபெரும் கருணையுடன் அவருக்கு பதில் அளிக்கின்றான். சில நேரம் இதுபோன்ற தற்செயலான நிகழ்வும் நிகழ்கின்றது. அதாவது ஒருவேளை அவர் தனது கஷ்டங்கள் மற்றும் துன்பங்களின் வேளையில் ஆயிரம் முறை அவர் வேண்டினாலும் அந்த ஆயிரம் முறையும் தனது கண்ணிய மிகு இறைவன் புறமிருந்து மிகவும் தெளிவான, புத்தம் புதிய, மற்றும் அருளுக்குரிய சொற்களில் அன்பு நிறைந்த பதில் அவருக்கு கிடைக்கின்றது. இறை இல்ஹாம் மழையைப் போன்று அவர் மீது பொழிகின்றது. மேலும் ஒரு மிகவும் தூய்மையான கண்ணாடி ஒரு மிகவும் நுட்பமான வாசனைத் திரவியத்தால் நிறைந்திருப்பதைப் போன்று அவர் தனது உள்ளத்தில் இறைநேசம் நிறைந்திருப்பதாக காண்கின்றார். அன்பு மற்றும் ஆர்வத்தின் ஒரு தூய இன்பம் அவருக்கு வழங்கப்படுகின்து. அது அவருடைய கடினத்திலும் கடினமான மனயிச்சைகளின் சங்கிலிகளை உடைத்து அவரை அதளபாதாளத்திலிருந்து வெளியேற்றி விடுகின்றது. அதாவது அசுத்தமான காற்று மற்றும் மாசடைந்த காற்று, புகை ஆகியவற்றிலிருந்து வெளியேற்றி விடுகின்றது. உண்மையான நேசனின் குளிர்ந்த மற்றும் மனமகிழச் செய்யும் காற்றின் மூலம் ஒவ்வொரு கணமும், நொடியும் அவருக்கு வாழ்வளித்துக் கொண்டிருக்கின்றது. (பராஹீனே அஹ்மதிய்யா, ரூஹானீ கஸாயீன், தொகுதி 1, பக்கம் 345 -349, அடிக்குறிப்பு எண்: 2)

அடுத்து, திருக்குர்ஆன் உறுதியான, நம்பத் தகுதந்த வேதம் என்று அன்னார் (அலை) கூறினார்கள்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: அல்லாஹ்வின் வேதமான திருக்குர்ஆனை விட வேறு எந்த நம்பத்தகுதந்த உறுதியான வேதம் நமது கரங்களில் இல்லை. அது இறைவனின் வேதம் ஆகும். அது ஐயம் மற்றும் அனுமானத்தின் அசுத்தங்களிலிருந்து பரிசுத்தமானதாகும்.

(ரிவியூவ் பார்முபாஹிஸா படாலவி வ சக்டாலவி, ரூஹானீ கஸாயீன், தொகுதி 19, பக்கம் 209)

திருக்குர்ஆன் உலக சமுதாயங்களை ஒன்றிணைப்பதற்காக வந்துள்ளது என்ற விஷயத்தை எடுத்துரைத்தவாறு அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: இறைவன் முதலில் தனித்தனியாக ஒவ்வொரு சமுதாயத்திற்கும் தனித்தனியான செயல் சட்டங்களை அனுப்பினான். பின்னர், எவ்வாறு இறைவன் ஏகனாக இருக்கின்றானோ அதுபோன்று அவர்களும் ஒன்றாக ஆகிவிட வேண்டும் என்று விரும்பினான். அப்போது அனைவரையும் ஒன்றிணைப்பதற்காக திருக்குர்ஆனை அனுப்பினான். மேலும் இவ்வாறு செய்தி வழங்கினான். அதாவது ஒரு காலம் வரவுள்ளது. அப்போது இறைவன் அனைத்து சமுதாயங்களையும் ஒரே சமுதாயமாக ஆக்கிவிடுவான். மேலும் அனைத்து நாடுகளையும் ஒரே நாடாக ஆக்கிவிடுவான். மேலும் அனைத்து மொழிகளையும் ஒரே மொழியாக ஆக்கிவிடுவான் என்று செய்தி வழங்கினான். (நஸீமே தஃவத், ரூஹானீ கஸாயீன், தொகுதி 19, பக்கம் 428)

பல்வேறு மார்க்கங்கள் ஏன் தோன்றின? என்று மக்கள் கூறுகின்றனர். ஏனெனில், அந்த நேரத்தில் அவர்களின் அறிவும், புரிதலும், அப்போது இருந்த வசதிவாய்ப்புகளும் அந்த காலத்திற்குள் மட்டுமே குறுகியதாக இருந்தன. முந்தைய காலத்தில் தனித்தனியாக நபிமார்கள் அனுப்பப்பட்டனர். தற்போது எப்படிப்பட்ட ஒரு காலம் வந்து விட்டது என்றால் தற்போது அனைவரும் ஒன்றிணைய முடியும். எனவே ஒரு முழுமையான ஷரீஅத் திருக்குர்ஆன் வடிவில் நமக்கு இறைவன் அனுப்பிவிட்டான்.

மேலும், அனைத்து தேசங்களும் ஒரே தேசமாக ஆக்கிவிடுவான். அனைத்து மொழிகளும் ஒரே மொழியாக ஆக்கப்படும் என்று அவன் கூறினான். உலகம் ஒன்றாகிவிட்டது. உலகம் ஒரே நகரம் போன்ற நிலையை அடைந்து விட்டது என்பதை குறிக்க இன்று உலகில் குளோபல் வில்லேஜ் என்ற ஒரு சொல் வழக்கு (term) பயன்படுத்தப்படுகின்றது. எவ்வாறு இருப்பினும், திருக்குர்ஆனே ஒரே வேதமாக இருக்கின்றது. அதாவது உலகில் பல்வேறு மொழிகள் பேசக்கூடியர்களும் இருக்கின்றனர். மேலும் பல்வேறு மொழிகள் பேசப்படுகின்றனது. ஆனால் உலகில் முஸ்லிம் எங்கு இருந்தாலும், மேலும் எந்த சமுதாயத்தைச் சார்ந்த முஸ்லிமாக இருந்தபோதிலும் அவர் அரபி மொழியில் ஓதுகின்றார். மேலும் அதேபோன்று ஐவேளை தொழுகைகளில் அதனை பயன்படுத்துகின்றார்.

முந்தைய வேதங்கள் மற்றும் நபிமார்கள் மீது திருக்குர்ஆன் உபகாரம் செய்துள்ளது என்ற விஷயத்தை எடுத்துரைத்தவாறு அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: திருக்குர்ஆன் முந்தைய வேதங்கள் மற்றும் நபிமார்கள் மீது உபகாரம் செய்துள்ளது. அதாவது அவர்களின் போதனைகள் கதைகளின்

வடிவில் இருந்தன. அவற்றிற்கு அறிவார்ந்த வடிவத்தை திருக்குர்ஆன் கொடுத்தது. நான் மெய்யாகவே கூறுகின்றேன். எந்தவொரு நபரும் திருக்குர்ஆனை படிக்காத வரை அந்த கதைகளிலிருந்து இரட்சிப்பு பெற முடியாது.

ஏனெனில், إِنَّهُ لَقَوْلٌ فَصْلٌ ۙ وَمَا هُوَ بِالْهَزْلِ என்பது திருக்குர்ஆனுக்கே உரிய மேன்மையாகும். அது ஒளியாகவும், குணமளிக்கக்கூடியதாகவும், கருணையாகவும் உள்ளது. எந்த மக்கள் திருக்குர்ஆனை ஓதுகின்றார்களோ மேலும் அதனை பழங்கதையாக கருதுகின்றனரோ அவர்கள் திருக்குர்ஆனை ஓதவில்லை. மாறாக அவர்கள் அதற்கு அவமரியாதை செய்துள்ளார்கள் என்றே பொருள்.

எமது எதிரிகள் எம்மை எதிர்ப்பதில் இந்த அளவிற்கு வேகம் காட்டுகின்றனர்? ஏனெனில் காரணம் இது மட்டுமே ஆகும். அதாவது, அது முற்றிலும் ஒளியும், நுட்பமான ஞானமும், இறைஞானம் மிக்கதும் ஆகும் என்று இறைவன் கூறுவதைப் போன்று நாம் திருக்குர்ஆனை காட்ட விரும்புகின்றோம். மேலும், திருக்குர்ஆனை ஒரு சாதாரண கதையை விட அதிக அந்தஸ்து அதற்கு கொடுக்கக் கூடாது என்பதற்கு (எதிரிகளாகிய) அவர்கள் முயற்சி செய்கின்றனர். எம்மால் அதனை சகித்துக் கொள்ள முடியாது. திருக்குர்ஆன் ஓர் உயிருள்ள மற்றும் ஒளிமயமான வேதம் ஆகும் என்பதை இறைவன் தனது அருளினால் எமக்கு தெளிவுபடுத்திவிட்டான். அவ்வாறிருக்க நாம் ஏன் அவர்களின் எதிர்ப்பை பொருட்படுத்த வேண்டும்!

(மல்ஃபூஸாத், தொகுதி 3, பக்கம் 155, 1984 ஆம் ஆண்டு பதிப்பு)

திருக்குர்ஆனின் மகத்துவத்தை எடுத்துரைத்தவாறு அன்னார் (அலை) கூறினார்கள்: திருக்குர்ஆனின் மகத்துவத்திற்கான பெரும் பெரும் சான்றுகளில் ஒரு சான்று இதுவும் ஆகும். அதாவது, அதில் மகத்துவ மிக்க ஞானங்கள் உள்ளன. அவற்றை தவ்ராத் மற்றும் இன்ஜீலில் தேடுவதே வீணான காரியமாகும். அவை அங்கு கிடைக்கவே முடியாது.

ஒரு சிறிய மற்றும் பெரிய தகுதி படைத்த நபர்கள் தத்தமது புரிதலுக்கேற்ப அவற்றிலிருந்து பங்கு பெற முடியும்.

(மல்ஃபூஸாத், தொகுதி 4, பக்கம் 381, 1984 ஆம் ஆண்டு பதிப்பு)

அதாவது திருக்குர்ஆனின் ஞானங்களிலிருந்து பங்கு பெற முடியும்.

எனவே அதன் பொருள் மற்றும் அர்த்தங்களை சீர்தூக்கி, சிந்தித்துப் பார்க்கின்ற பழக்கத்தை ஒவ்வொருவரும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அப்போதுதான் இறைவனின் வேதத்தின் அழகு நமக்கு தெரிய வரும். திருக்குர்ஆனுடைய ஏவல்கள் மற்றும் விலக்கல்களை பற்றி அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: திருக்குர்ஆனில் தொடக்கம் முதல் இறுதி வரை ஏவல்கள், விலக்கல்கள் மற்றும் இறைகட்டளைகளின் விளக்கம் உள்ளது. மேலும் பல்வேறு வகையான கட்டளைகளின் பலநூறு கிளைகளை எடுத்துரைத்துள்ளது. (மல்ஃபூஸாத், தொகுதி 8, பக்கம் 374, 1984 ஆம் ஆண்டு பதிப்பு)

ஓரிடத்தில் அன்னார் (அலை) கூறினார்கள்: திலாவத் செய்கின்றபோது அவற்றை தேட வேண்டும். மேலும் அவற்றை வாழ்வின் அங்கமாக ஆக்கிக் கொள்ள வேண்டும். அப்போதுதான் நாம் இறைவனின் வேதத்திலிருந்து உண்மையான அருளை பெற முடியும். (மல்ஃபூஸாத், தொகுதி 8, பக்கம் 376)

திருக்குர்ஆனின் அழகை எடுத்துரைத்தவாறு ஓரிடத்தில் அன்னார் (அலை) கூறினார்கள்: திருக்குர்ஆன் எப்படிப்பட்ட உறுதியான நம்பத் தகுந்த இறை வேதம் என்றால் அதன் ஒரு புள்ளி மற்றும் கமாவில் கூட மனிதனின் தலையீடு கிடையாது. அது தனது சொற்களிலும், பொருளிலும் இறைவனுடைய வேதமாகவே இருக்கின்றது. எந்த இஸ்லாமிய பிரிவிற்கும் இதை ஏற்பதை தவிர வழியில்லை. அதாவது இதனை ஒப்புக் கொள்வதை தவிர வேறு வழியில்லை. அதனுடைய ஒவ்வொரு வசனமும் உயர்தரமான தொடர்புகளை தன்னகத்தே கொண்டுள்ளது. அவை வஹீயே மத்லுவ்வா என்றழைக்கப்படுகின்றது. அதாவது மீண்டும் மீண்டும் ஓதப்படக்கூடிய வஹீயாகும். அதனுடைய ஒவ்வொரு எழுத்தும் எண்ணப்பட்டுள்ளன. அது தனது தனித்தன்மையின் காரணமாகவும் மாற்றங்கள் மற்றும் திரித்தல் போன்ற விஷயங்களிலிருந்து பாதுகாப்பானதாக உள்ளது. (இஸாலாயே அவ்ஹாம், ரூஹானீ கஸாயீன், தொகுதி 3, பக்கம் 384)

அவற்றின் ஒழுங்கமைப்பு எப்படிப்பட்டதாக உள்ளதென்றால் அதுவும் அற்புதமாகும். அதாவது அதனை மாற்றவே முடியாது. அவ்வாறிருக்க, நான் திருக்குர்ஆனில் மாற்றம் செய்துவிட்டேன் என்று ஒருவர் எவ்வாறு கூறமுடியும்.

திருக்குர்ஆன் சீர்கெட்டுப்போனால் அது தனது அசல் நிலையில் இருக்கவே முடியாது. மேலும் அதன் மையக் கருத்தும் நிலைபெற்றிருக்க முடியாது. (ஆக, திருக்குர்ஆனில் எவராலும் எந்த மாற்றத்தையும் செய்ய முடியாது)

அடுத்து, திருக்குர்ஆனின் சொற்களின் ஆழம் மற்றும் பொருள்களின் சிறப்புகளை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறினார்கள்:

திருக்குர்ஆனின் ஆழிய கருத்துகள், இறைஞானங்கள் மற்றும் உண்மைத்துவங்களும் காலத்தின் தேவைக்கேற்பவே திறந்து கொடுக்கப்படுகின்றன. உதாரணமாக, நாம் எந்தக் காலத்தில் இருக்கின்றோமோ மேலும், எந்த மார்க்க ஞானங்களுக்கு எதிராக தஜ்ஜாலிய பிரிவினரை எதிர்கொள்வதற்கு நமக்கு தற்போது தேவை ஏற்பட்டுள்ளதோ அந்த தேவை தஜ்ஜாலிய பிரிவினரின் காலத்தை அடைந்திராத அந்த மக்களுக்கு ஏற்பட்டிருக்கவில்லை. ஆக, அந்த விஷயங்கள் அந்த மக்கள் மீது மறைவாக இருந்தது. மேலும் நமக்கு அவை திறந்து கொடுக்கப்பட்டுள்ளன. (இஸாலாயே அவ்ஹாம், ரூஹானீ கஸாயின், தொகுதி 3, பக்கம் 451)

கருத்து இடம் மற்றும் சந்தர்ப்பத்தின் அடிப்படையில் அதிலிருந்து வெளிப்படுகின்றது. அந்தக் காலத்தில் தேவையிருக்கவில்லை. அந்தக் காலத்தில் செய்யப்பட்ட தஃப்ஸீர்கள் அக்காலத்தின் நிலைமைக்கேற்ப இருந்தன. இன்று செய்யப்படுகின்ற தஃப்ஸீர்கள் இன்றைய காலத்தின் நிலைமைக்கேற்ப அமைந்துள்ளன. திருக்குர்ஆனிலிருந்தே அதற்கு சான்று கிடைக்கின்றது. மேலும் அதிலிருந்தே விளக்கம் கிடைக்கின்றது. அவற்றின் சொற்களை சீர்தூக்கிப் பார்ப்பதிலிருந்தே அவற்றின் பொருள் தெளிவாகி விடுகின்றது.

எனவே இதுபோன்ற வேதமே கியாமத் நாள் வரை நிலைபெறக் கூடிய வேதமாக இருக்க முடியும். அதாவது தேவைக்கேற்ப சொற்களிலிருந்து அர்த்தங்கள் வெளிப்பட்டுக் கொண்டே செல்கின்றன.

அடுத்து திருக்குர்ஆனின் அழகை எடுத்துரைத்தவாறு அன்னார் (அலை) கூறினார்கள்: திருக்குர்ஆனின் மறைமுகமான ஞானத்திற்கான சான்று ஸஹீஹ் ஹதீஸ்களிலிருந்தும், தெளிவான வசனங்களிலிருந்தும் கிடைக்கின்றன. வீணான வகையில் ஒருபோதும் வெளிப்படுவதில்லை. இன்னும் கூறப்போனால், அந்த ஆன்மிக அற்புதத்தின் வெளிப்பாட்டிற்கு கடுமையான தேவை ஏற்படும் நேரத்திலேயே அந்த தெளிவான அற்புதம் தனது தோற்றத்தை வெளிப்படுத்துகின்றது. (இஸாலாயே அவ்ஹாம், ரூஹானீ கஸாயீன், தொகுதி 3, பக்கம் 465)

ஞானங்களும் கிடைக்கின்றன. மேலும் ஸஹீஹ் ஹதீஸ்களிலிருந்து அவற்றிற்கான சான்றுகளும் கிடைக்கின்றன. தெள்ளத்தெளிவான வசனங்களும் உள்ளன. அவையும் அதற்கான சான்று பகர்கின்றன.

அடுத்து, அன்னார் (அலை) கூறினார்கள்: திருக்குர்ஆனில் எல்லாம் இருக்கின்றது. ஆனால், அகப்பார்வை கிடைக்காத வரை எதுவும் கிடைக்க முடியாது. அகப்பார்வை நிபந்தனையாகும். திருக்குர்ஆனை ஓதக்கூடியவர் ஓர் ஆண்டிலிருந்து அடுத்த ஆண்டிற்கு முன்னேற்றம் அடையும்போது, தான் ஒரு பள்ளிக் குழந்தையாக இருந்ததாக கடந்த ஆண்டைக் குறித்து அறிவார். ஏனெனில் இது இறைவனின் வேதம் ஆகும். இதில் இப்படித்தான் முன்னேற்றமும் ஏற்படுகின்றதே தவிர, அவர் ஒருமுறை படித்துவிட்டு எல்லா அறிவும் அவருக்கு கிடைத்து விட்டது என்பது நடக்க முடியாது. இன்னும் கூறப்போனால் ஒரு வருடம் ஆழ்ந்து சிந்தித்ததற்கு பிறகு அடுத்த வருடத்தில் அவர் அடியெடுத்து வைக்கும்போது, மீண்டும் ஆழ்ந்து சிந்திக்க துவங்கும்போது, தான் முன்னர் படித்த வந்த விஷயங்கள் ஒன்றுமேயில்லையே! துவக்க விஷயங்களாக இருந்தன. அது குழந்தைகளின் நிலையாக இருந்தது. அது தற்போது எனக்கு புரிந்துள்ளது. தற்போது நான் சரியான இடத்தை அடைந்துள்ளேன் என்று அவர் உணர்ந்து கொள்வார். பின்னர் அவர் இவ்வாறு ஒவ்வொரு ஆண்டும் முன்னேற்றம் அடைந்து கொண்டே செல்கின்றார்.

கூறினார்கள்: எந்த மக்கள் திருக்குர்ஆனை அற்பமாக கருதுகின்றனரோ மேலும் அதனை நேசிப்பதில்லையோ அவர்கள் திருக்குர்ஆனிற்கு எந்த கண்ணியமும் அளிக்கவில்லை. திருக்குர்ஆனை ஆழிய ஞானங்கள் மிக்கது என்று கூறவேண்டும். ஞானங்களால் நிறைந்தது என்று கூறவேண்டும். அதில் எண்ணற்ற இறை ஞானங்கள் உள்ளன. ஒவ்வொரு இடத்திலிருந்தும் பல ஞானங்கள் வெளிப்படுகின்றன. மேலும் ஒரு கருத்து மற்றொரு கருத்துடன் முரண்படுவதாக இருப்பதில்லை. அதாவது ஒரு கருத்து மற்றொரு கருத்தை முறிப்பதில்லை. அதனை மறுக்கக்கூடியதாக இருப்பதில்லை. ஆனால் மிகவும் அவசரப்படக்கூடிய, காழ்ப்புணர்ச்சிக் கொண்ட, கோபப்படக்கூடிய இயல்புகளுக்கு திருக்குர்ஆனுடன் பொருத்தம் இல்லை. மேலும் அதுபோன்ற மக்களுக்கு திருக்குர்ஆன் திறந்து கொடுக்கப்படுவதுமில்லை. (மல்ஃபூஸாத், தொகுதி 2, பக்கம் 221, 1984 ஆம் ஆண்டு பதிப்பு)

ஆக, ஆழ்ந்து சிந்திக்கக்கூடிய, பரிசுத்தமான, அல்லாஹ்வின் அடைக்கலத்தின் கீழ் வரக்கூடிய, அதிலிருந்து ஞானத்தை பெறுவதற்கு துஆ செய்யக்கூடிய மக்களின் மீதே அதன் ஞானங்கள் திறந்து கொடுக்கப்படுகின்றன.

கூறுகின்றார்கள்: திருக்குர்ஆன் சந்தேகத்திற்கு இடமின்றி முழுமையான உண்மைத்துவத்தையும், ஞானங்களையும் கொண்டுள்ளது. மேலும், எல்லா காலத்திலும் அனைத்து பித்அத்களையும் எதிர்க்கக்கூடியதாக உள்ளது. இந்த எளியவனின் நெஞ்சம் அதன் கண்கூடான அருட்களாலும், நுட்பமான ஞானங்களாலும் நிறைந்துள்ளது.

இக்காலத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களே அதன் உண்மைத்துவத்தையும், ஞானங்களையும் நமக்கு வெளிப்படுத்தி தந்துள்ளார்கள். மேலும் அன்னாரின் நூல்களிலிருந்து அதற்கு கூடுதல் விளக்கம் கிடைக்கின்றது. அதனை புரிந்து படித்தால் பின்னர் திருக்குர்ஆனின் சிறப்புகள் மற்றும் ஞானத்தைக் குறித்த அறிவை நமக்கு இன்னும் கூடுதலாக அதிகரிக்கின்றது.

கூறினார்கள்: ..... சந்தேகத்திற்கு இடமின்றி, நமது நன்மை, அறிவில் முன்னேற்றம் மற்றும் நமது நிரந்தர வெற்றிகளுக்காக நமக்கு திருக்குர்ஆன் வழங்கப்பட்டுள்ளது. அதன் அடையாளங்களும், இரகசியங்களும் முற்றுப் பெறாத தொடராகும். அவை உள்ளத்தை தூய்மைப்படுத்துதல் மற்றும் வெளிச்சமான, ஒளிமயமான மனசாட்சியின் சிந்தனையால் தான் அவை திறந்து கொடுக்கப்படுகின்றன.

கூறினார்கள்: இறைவன் நம்மை எந்த சமுதாயத்துடன் எப்போது மோத வைத்தானோ அந்த சமுதாயத்தின் மீது திருக்குர்ஆன் மூலமாகவே நமக்கு வெற்றியை வழங்கியுள்ளான். அது எவ்வாறு எழுதப்படிக்கத் தெரியாத கிராம வாசியை ஆறுதல் அடையச் செய்கின்றதோ அதுபோன்றே ஒரு பகுத்தறிவு தத்துஞானிக்கும் மனநிறைவை வழங்குகின்றது. திருக்குர்ஆன் ஒரு கூட்டத்தினருக்காக மட்டுமே இறங்கிய வேதம் அல்ல. எந்த ஒரு பிரிவும் அதிலிருந்து இழப்பிற்குரியதாக ஆக்கப்படவில்லை. நிச்சயமாக அதில் ஒவ்வொரு நபருக்கும், ஒவ்வொரு காலத்திற்கும், ஒவ்வொரு தகுதி படைத்தவருக்கும் சிகிச்சை உள்ளது. எந்த மக்கள் கோணலான இயல்பும், குறைபாடுடைய இயல்பும் கொண்டவர்களாக இல்லையோ அவர்கள் அதன் மகத்துவத்தின் மீது ஈமான் கொள்கின்றனர். அதாவது தனது படைப்பின் நோக்கத்தை உணராத குறைமதி படைத்த மக்களாக இருப்பவர்கள் அல்லது முன்னேற்றத்திற்கு பகரமாக வீழ்ச்சியின் பக்கம் செல்லக்கூடிய மக்கள் மற்றும் ஆன்மிகத்தின் அடிப்படையில் குறைவான அறிவு படைத்த மக்கள் ஆகியோருக்கு திருக்குர்ஆனிலிருந்து பயன் கிடைப்பதில்லை. ஆனால், அந்த மக்கள் அப்படிப்பட்டவர்கள் இல்லையென்றால் பின்னர் மகத்துவங்களின் மீது ஈமான் கொள்வது அவர்களுக்கு கட்டாயம் ஆகும். மேலும் அவர்கள் ஈமான் கொள்கின்றனர். மேலும் அவற்றின் ஒளிகளிலிருந்து அவர்கள் பயனடைகின்றனர். (அல்ஹக் லூதியானா, ரூஹானி கஸாயீன், தொகுதி 4, பக்கம் 110)

கூறுகின்றார்கள்: என்னிடம் கூறப்பட்டுள்ளது. அதாவது அனைத்து வழிகாட்டல்களிலும் திருக்குர்ஆனின் வழிகாட்டல்கள் மட்டுமே முழுமையாக நம்பத் தகுந்த அந்தஸ்தை கொண்டதாகவும், மனித கலப்படங்களிலிருந்து பரிசுத்தமானதாகவும் உள்ளது. (அர்பயீன் நம்பர் 1, ரூஹானீ கஸாயீன், தொகுதி 17, பக்கம் 345)

அடுத்து, அன்னார் (அலை) கூறினார்கள்: எமது கொள்கை என்னவென்றால் இயல்பான அறிவுகள் எந்த அளவிற்கு முன்னேற்றம் அடையுமோ மேலும் செயல்வடிவத்தை மேற்கொள்ளுமோ அதே அளவிற்கு திருக்குர்ஆனின் மகத்துவம் உலகில் நிலைபெறும். (மல்ஃபூஸாத், தொகுதி 2, பக்கம் 87, 1984 ஆம் ஆண்டு பதிப்பு)

எனவே உலகியல் கல்விகளில் ஆராய்ச்சி செய்யக்கூடிய நம்மவர்கள் இருக்கின்றனர். அவர்களும் திருக்குர்ஆனிலிருந்து உதவி பெற்றுக் கொள்ள வேண்டும். மேலும், அல்லாஹ்வின் அருளால் அப்படி (உதவி) பெறக்கூடிய ஏராளமான நபர்கள் இருக்கவும் செய்கின்றனர். தங்களது கட்டுரைகளை எழுதவும் செய்கின்றனர்.

திருக்குர்ஆனில் எவ்வாறு ஞானங்கள் மறைந்திருக்கின்றன என்று திருக்குர்ஆனின் மேன்மையை நிரூபணம் செய்யவும் வேண்டும்.

டாக்டர் அப்துஸ் ஸலாம் ஸாஹிப் அவர்களும் எப்போதும் இதே விதிமுறையின்படி பணி செய்து வந்தார்கள். அடுத்து அன்னார் (அலை) கூறினார்கள்: திருக்குர்ஆன் சந்தேகத்திற்கு இடமின்றி எல்லையற்ற ஆழிய ஞானங்களை உள்ளடக்கியுள்ளது. மேலும் எல்லா காலத்திலும் ஏற்படும் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு முழுமையான முறையில் தகுதி படைத்ததாக உள்ளது. (இஸாலாயே அவ்ஹாம், தொகுதி 1, ரூஹானீ கஸாயீன் தொகுதி 3, பக்கம் 261)

கூறுகின்றார்கள்: திருக்குர்ஆனில் ஆழிய கருத்துகளும், உண்மைத்துவங்களும், சிறப்புகளும், நுட்பமான ஞானங்களும், சொற்செறிவும் முழுமையான முறையிலும், நிறைவான வகையிலும் காணப்படுகின்றன. இந்த மகத்துவ மிக்க அந்தஸ்து வேறு எந்த வேதத்திற்கு கிடையாது. (தவ்ஸீஹே மராம், ரூஹானி கஸாயீன், தொகுதி 3, பக்கம்

86)

கூறினார்கள்: திருக்குர்ஆனை இறைவன் நன்மை என்று கூறியுள்ளான். ஆக وَمَنْ يُّؤْتَ الْحِكْمَةَ فَقَدْ أُوْتِيَ خَيْرًا كَثِيْرًا என்று கூறியுள்ளான். (அல்பக்கரா: 270) எனவே திருக்குர்ஆன் இறைஞானம் மற்றும் அறிவுச் செல்வத்தின் கருவூலம் ஆகும். இறைவன் திருக்குர்ஆனுடைய ஆழிய ஞானத்திற்கும், அறிவிற்கும் செல்வம் என்றும் பெயர் வைத்துள்ளான். உலகியல் அருட்களும் அதனுடன் கிடைக்கின்றது. (மல்ஃபூஸாத், தொகுதி 2, பக்கம் 328, 1984 ஆம் ஆண்டு பதிப்பு)

அடுத்து, ஓர் எச்சரிக்கை விடுத்தவாறு அன்னார் (அலை) கூறினார்கள்: நிச்சயமாக நினைவிற் கொள்ளுங்கள். எவர் பாவத்திலிருந்து விலகுவதில்லையோ அவர் இறுதியில் மரணிப்பார். நிச்சயமாக அவர் மரணிப்பார். உலகம் இந்த விஷத்தால் அழிந்து விடக் கூடாது மாறாக அதன் தாக்கங்களை அறிந்து கொண்டு தப்பித்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே அல்லாஹ் தனது நபிமார்களையும், தூதர்களையும் அனுப்பியுள்ளான். மேலும், தனது இறுதி வேதமான திருக்குர்ஆனையும் அதற்காகவே இறக்கியுள்ளான். (மல்ஃபூஸாத், தொகுதி 7, பக்கம் 185,1984 ஆம் ஆண்டு பதிப்பு)

எனவே இதுவும் ஒவ்வொரு அஹ்மதியின் பணியாகும். அதாவது எங்கு அவர் தனது நிலையை திருக்குர்ஆனின் போதனைக்கேற்ப ஆக்கிக் கொள்வதற்கு முயற்சி செய்வாரோ அங்கு உலகையும் இந்த போதனையை அறியச் செய்ய வேண்டும். மேலும் ஆன்மிக மற்றும் பௌதீக அழிவிலிருந்து அவர்களை காப்பாற்ற வேண்டும்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காத்தமுன்னபிய்யீன் ஆவார்கள்.மேலும் திருக்குர்ஆன் காத்தமுல் குதுப் ஆகும். இனி வேறு எந்த கலிமாவும், தொழுகையும் இருக்க முடியாது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்னவெல்லாம் கூறியுள்ளார்களோ அல்லது செய்து காட்டினார்களோ மேலும் திருக்குர்ஆனில் என்னவெல்லாம் உள்ளதோ அதனை விட்டுவிட்டு இரட்சிப்பு கிடைக்க முடியாது. எவர் அதனை விட்டுவிடுவாரோ அவர் நரகத்திற்கு செல்வார். இது நமது நிலைபாடும், கொள்கையும் ஆகும். (மல்ஃபூஸாத், தொகுதி 8, பக்கம் 252, 1984 ஆம் ஆண்டு பதிப்பு)

இவ்வாறு கொள்கை கொண்ட நபர் திருக்குர்ஆன் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை நிந்தனை செய்பவராக எவ்வாறு இருக்க முடியும்? அந்தோ! இந்த விஷயம் பாமர முஸ்லிம்களுக்கும் புரிந்திருக்க வேண்டுமே! மேலும் அவர்கள் தீங்கை விரும்பும் ஆலிம்களின் கட்டுப்பாட்டிலிருந்து வெளியேறி காலத்தின் இமாமை அடையாளம் காண்பவர்களாக ஆகிவிட வேண்டுமே!

அடுத்து, அன்னார் (அலை) கூறினார்கள்: உண்மையின் விதிமுறைகள் மற்றும் எந்த நிச்சயமான உறுதியின் மீது நமது இரட்சிப்பு அடிப்படையாக உள்ளதோ அவற்றை அடையாளம் காண்பதற்கான உறுதியான, முழுமையான மற்றும் எளிமையான வழிமுறை திருக்குர்ஆன் மட்டுமே ஆகும். (பராஹீனே அஹ்மதிய்யா, ரூஹானி கஸாயீன், தொகுதி 1, பக்கம் 77)

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: اِنَّا نَحْنُ نَزَّلْنَا الذِّكْرَ وَاِنَّا لَهٗ لَحٰفِظُوْنَ என்று அல்லாஹ் கூறியுள்ளான். (அல்ஹிஜ்ர்: 10) பொருள்: நாமே இந்த திருக்குர்ஆனை இறக்கினோம். மேலும் நாமே இதனை பாதுகாப்போம். அதாவது அதன் பொருளில் தவறுகள் ஏற்படும்போது அதனை சீர்திருத்துவதற்காக எம் புறமிருந்து அனுப்பப்பட்டவர் வந்து கொண்டிருப்பார்கள். மேலும் அல்லாஹ் தனது வாக்குறுதிக்கேற்ப இக்காலத்தின் இமாமாக ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானி (அலை) அவர்களை அனுப்பினான்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: அல்லாஹ்வின் இந்த வழிகாட்டலை சீர்தூக்கிப் பாருங்கள். மேலும் காலத்தின் என்ன நிலைமை என்பதைப் பாருங்கள். அந்நிய மார்க்கத்தைச் சேர்ந்த மக்கள் உங்களை பிடித்து பிடித்து உங்களது மார்க்கத்திலிருந்து விலக்கி வருகின்றனர். தஜ்ஜாலிய சதி செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஆனால், நீங்கள் தோன்றக்கூடிய மஸீஹ் மற்றும் மஹ்தியை தஜ்ஜால் என்று அழைத்து அவரிடமிருந்து முஸ்லிம் உலகை விலக்குவதற்கு முயற்சி செய்து வருகின்றீர்கள்.

அன்னார் (அலை) கூறினார்கள்: நீங்கள் என்னைப் பற்றி எண்ணம் கொள்ளாதீர்கள். நான் வந்துவிட்டேன். நான் இந்த வாதத்தை செய்துள்ளேன் என்று எண்ணம் கொள்ளாதீர்கள். காலத்தை பாருங்கள். நூற்றாண்டின் துவக்கம், வெளிப்புற தாக்குதல்கள் மற்றும் உள்ளார்ந்த செயல் நிலைகள் ஆகியவற்றை பார்த்து விட்டு, இக்காலத்தில் தஜ்ஜாலிற்கான அவசியம் உள்ளதா? அல்லது மஹ்தி மற்றும் மஸீஹிற்கான அவசியம் உள்ளதா? என நீங்கள் சுயமே சீர்தூக்கி சிந்தித்துப் பாருங்கள்.

அன்னார் (அலை) கூறினார்கள்: காழ்ப்புணர்ச்சி மிக மோசமான தீமையாகும். காழ்ப்புணர்ச்சி கொண்டவர்கள் எந்த தூதரையும் ஏற்றுக் கொண்டதில்லை. (மல்ஃபூஸாத், தொகுதி 7, பக்கம் 230, 1984 ஆம் ஆண்டு பதிப்பு)

அல்லாஹ் முஸ்லிம்களுக்கு அறிவை வழங்குவானாக. மேலும் இவர்கள் புரிந்து கொள்ளட்டுமாக.

திருக்குர்ஆனின் சிறப்புகளை எடுத்துரைத்தவாறு அன்னார் (அலை) கூறினார்கள்:

திருக்குர்ஆனில் துவக்கம் முதல் இறுதி வரை இரண்டு விஷயங்களுக்கான ஏற்பாடு காணப்படுகின்றது. ஒன்று பகுத்தறிவு காரணங்கள் மற்றொன்று இல்ஹாமிய சாட்சியம் ஆகும். இந்த இரண்டு விஷயங்கள் ஃபுர்கானே மஜீத் (திருக்குர்ஆனில்) இரண்டு பெரும் நதிகளைப் போன்று ஓடுகின்றன. அவை ஒன்று மற்றொன்றின் உவமையாகவும், ஒன்று மற்றொன்றின் மீது தாக்கத்தை ஏற்படுத்திக் கொண்டே செல்லக்கூடியதாகவும் இருக்கின்றன. (பராஹீனே அஹ்மதிய்யா, ரூஹானி கஸாயீன், தொகுதி 1, பக்கம் 81, அடிக்குறிப்பு எண்: 4)

ஒன்று மற்றொன்றின் இணையாக சென்று கொண்டிருக்கின்றன. மேலும் இரண்டும் தாக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன.

கூறினார்கள்: காட்டுமிராண்டிகளை மனிதர்களாகவும், மனிதர்களை நல்லொழுக்கம் கொண்ட மனிதர்களாகவும் நல்லொழுக்கம் கொண்ட மனிதர்களை இறையடியார்களாகவும் ஆக்க வேண்டும் என்பதே திருக்குர்ஆனின் நோக்கமாகும். (இஸ்லாமி உஸூல் கி ஃபிலாஸஃபி, ரூஹானி கஸாயின், தொகுதி 10, பக்கம் 329)

மேலும் இந்த நோக்கம் அரேபியர்களிடத்தில் முழுமையடைந்ததையும், மிகவும் உயர்வான வடிவில் முழுமையடைந்ததையும் நாம் பார்க்கின்றோம்.

இது சில ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த ஒரு விஷயம் ஆகும். அதாவது என்னிடத்தில் சுயமே ஒரு யூதர் இதனை கூறினார். நான் முஸ்லிம் அல்ல. ஆனால் நான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை நபியாக ஏற்றுக் கொள்கின்றேன். ஏனெனில், அந்தக் காலத்தில் காட்டரபிகளின் நிலைமை மிகவும் மோசமானதாக இருந்தது. அந்த நிலை எந்த புரட்சிகரமான நிலையில் மாற்றப்பட்டதென்றால் அது ஒரு தூதரின் பணியாகவே இருக்க முடியும். வேறு ஒரு சாதாரண நபரால் செய்ய முடியாது. எவருக்கு அல்லாஹ்வின் உதவிகள் கிடைக்குமோ அவரால் மட்டுமே செய்ய முடியும்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: திருக்குர்ஆனைப் பார்த்து வியப்பு ஏற்படுகின்றது. அதாவது அந்த எழுதப்படிக்கத் தெரியாத நபர் வேதம் மற்றும் நுட்பமான ஞானத்திற்குரிய விஷயத்தை மட்டுமே கூறவில்லை. மாறாக, உள்ளத்தை பரிசுத்தப்படுத்தும் வழிகளையும் கற்றுக் கொடுத்தார். எந்த அளவிற்கு என்றால் اَيَّدَهُمْ بِرُوْحٍ مِّنْهُ என்ற நிலையை அவர்கள் அடைந்தனர். பொருள்: அவர்களுக்கு அவன் தனது கட்டளையினால் உதவி செய்கின்றான். (அல்முஜாதிலா: 23) இந்த அந்தஸ்து வரை அவர்களை அவர் அடையச் செய்துவிட்டார்.

பாருங்கள்! மேலும் ஆழமான பார்வை கொண்டு பாருங்கள்! திருக்குர்ஆன் எல்லா வகையான தேடல் கொண்டவர்களையும் அவர்களின் தேடல்கள் வரை கொண்டு சேர்க்கின்றது. மேலும் ஒவ்வொரு நேர்மை மற்றும் உண்மையின் தாகம் கொண்டவர்களின் தாகத்தை அது தணிக்கின்றது. (மல்ஃபூஸாத், தொகுதி 1, பக்கம் 122, 1984 ஆம் ஆண்டு பதிப்பு)

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: ஒவ்வொரு இறை இல்ஹாமும் நம்பிக்கையூட்டுவதற்காகவே வருகின்றது. ஆனால் திருக்குர்ஆன் அந்த உயர் அந்தஸ்து மிக்க நம்பிக்கைக்கு அடித்தளம் அமைத்துவிட்டது. அதாவது அது உச்சத்தை தொட்டுவிட்டது. (பராஹீனே அஹ்மதிய்யா, ரூஹானி கஸாயீன், தொகுதி 1, பக்கம் 80, அடிக்குறிப்பு எண்: 4)

ஜமாஅத் உறுப்பினர்களுக்கு திருக்குர்ஆன் போதனையின்படி முழுமையாக அமல் செய்ய வைப்பதற்காக அன்னார் (அலை) கூறினார்கள்:

நமது பைஅத் உடன்படிக்கையிலும் இதனை வைத்துள்ளோம். ஆக, ஆறாவது பைஅத் நிபந்தனை இதுவாகும். அதாவது சடங்கு சம்பிரதாயங்களை பின்பற்றுவதிலிருந்தும், மனயிச்சைகளை பின்பற்றுவதிலிருந்தும் நான் விலகியிருப்பேன். திருக்குர்ஆனின் ஆட்சியை முழுமையாக என் மீது ஒப்புக் கொள்வேன். அல்லாஹ்வின் கூற்று மற்றும் இறைத் தூதரின் கூற்றை எனது எல்லா வழியிலும் செயல்படுத்தக்கூடிய சட்டமாக நான் என் மீது ஆக்கிக் கொள்வேன் என்பது ஆறாவது பைஅத் நிபந்தனையாகும். (இஸாலாயே அவ்ஹாம், ரூஹானீ கஸாயீன், தொகுதி 3, பக்கம் 564)

ஆனால் அறிவுக் குருடர்களான தீய ஆலிம்கள் இருக்கின்றனர். அவர்களின் பார்வையில் நாம் இதன் பின்னரும் திருக்குர்ஆனில் மாற்றம் செய்யக் கூடியவர்களாக இருக்கின்றோம்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: இறைவேதத்தின் எந்தவொரு வசனத்திலும் மாற்றம் செய்வதற்கும், முன்னிலை படுத்துவதற்கும், பிற்படுத்துவதற்கும், சொற்றொடர்களை வெட்டி ஓட்டுவதற்கும் நமக்கு அங்கீகாரம் கிடையாது. நம்மால் மாற்றம் செய்யவும் முடியாது. எந்தவொரு மாறுபாட்டை ஏற்படுத்தவும் முடியாது. அதிலிருந்து முன்னால் செல்லவும் முடியாது. அதில் குறைவை ஏற்படுத்தவும் முடியாது. கூடுதலாக எதனையும் சேர்க்கவும் முடியாது. எவ்வகையான சொற்றொடர்களை உருவாக்குவதற்கும் நமக்கு அதிகாரம் கிடையாது.

ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சுயமே அப்படி செய்திருந்த நிலையில் மட்டுமே! ஆயினும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவ்வாறு செய்ததாக எங்காவது நிரூபணம் ஆகிவிட்டால் பின்னர் எமக்கு கூறுங்கள். ஏற்றுக் கொள்ளலாம்.

கூறினார்கள்: அவ்வாறு செய்ததாக நிரூபணம் ஆக வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சுயமே அப்படிப்பட்ட மாற்றங்கள் மற்றும் மாறுதல்களை செய்தார்கள் என்று நிரூபணம் ஆக வேண்டும். அவ்வாறு நிரூபணம் ஆகாத வரை நாம் திருக்குர்ஆனின் விரிவாக்கம் மற்றும் ஒழுங்கமைப்பில் ஸேர் ஸபரைக் கூட மாற்ற முடியாது. மேலும் அதில் நம் தரப்பிலிருந்து சில சொற்றொடரை சேர்க்கவும் முடியாது. மேலும் ஒருவேளை அவ்வாறு செய்தால் அல்லாஹ்வின் பார்வையில் குற்றவாளியாகவும், விசாரணைக்குரியவராகவும் இருப்போம். (இத்திமாமே ஹுஜ்ஜத், ரூஹானீ கஸாயின், தொகுதி 8, பக்கம் 291)

அன்னார் (அலை) கூறினார்கள்: அவ்வாறு செய்யவே முடியாதபோது நீங்கள் எம்மை ஏன் குற்றவாளி ஆக்குகின்றீர்கள்? ஒருவேளை நாம் அவ்வாறு செய்துவிட்டால் பின்னர் நாம் அல்லாஹ்வின் பார்வையில் குற்றவாளி ஆவோம்.

எனவே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் சுயமே திருக்குர்ஆனில் எல்லா வகையான மாற்றங்கள் மற்றும் மாறுதலை மறுத்துவிட்டார்கள். மேலும், திருக்குர்ஆனில் எல்லா வகையான மாற்றங்கள் மற்றும் மாறுதல்களை நிராகரித்து இந்த அறிவிப்பை அன்னார் (அலை) செய்தார்கள்:

நாம் அவ்வாறு செய்யக்கூடியவர்கள் என்றால் குற்றவாளி ஆவோம். அல்லாஹ்விடத்தில் விசாரணைக்குட்பட்டவர்கள் ஆவோம். ஆனால் நம் மீது ஆட்சேபனை செய்யக்கூடிய இந்த மக்கள் தங்களை அல்லாஹ்வை விடவும் பெரியவர்களாக கருதுகின்றனர். அதாவது அல்லாஹ் எங்களை குற்றவாளியாக ஆக்காதபோது இந்த மக்கள் எங்களை குற்றவாளிகளாக்கி எங்களை நிச்சயம் விசாரணை செய்ய விரும்புகின்றனர். இந்த மக்கள் இன்றைய நாட்களில் இவ்வாறு கூச்சலிட்டுக் கொண்டிருக்கின்றனர்.

அல்லாஹ் அதுபோன்ற மக்களின் தீங்கிலிருந்து ஒவ்வொரு அஹ்மதியையும் பாதுகாப்பானாக. மேலும் அவர்களின் தீங்கை அவர்களின் பக்கமே திருப்புவானாக.

உண்மையான பொருள்களில் திருக்குர்ஆனை புரிவதற்கும், அதன்படி அமல் செய்வதற்கும் நமக்கு நற்பேறு வழங்குவானாக. பாகிஸ்தானி அஹ்மதிகளுக்காகவும், பாகிஸ்தான் நாட்டின் பொதுவான நிலைமைக்காகவும் துஆ செய்யுங்கள். புர்கினாஃபாஸ்ஃவில் அஹ்மதிகளுக்காகவும், நாட்டின் பொதுவான நிலைமைக்காகவும் துஆ செய்யுங்கள். பங்களாதேஷின் அஹ்மதிகளுக்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களையும் பாதுகாப்பாக வைப்பானாக. அங்கு மீண்டும் இன்று அநேகமாக மவ்லவிகள் சற்று கூச்சலிட இருந்தனர். உலகின் ஒவ்வொரு நாட்டிலும் எங்கெல்லாம் அஹ்மதிகள் வசிக்கின்றனரோ அவர்களுக்காக துஆ செய்யுங்கள். நான் கூறியதுபோன்று தற்போது ரமலானும் ஆரம்பமாகின்றது. அதில் எங்கு குறிப்பாக திருக்குர்ஆனை ஓதுவதன் பக்கமும், புரிவதன் பக்கமும் கவனம் செலுத்துவோமோ அங்கு துஆக்களின் பக்கமும் கவனம் செலுத்துங்கள். அல்லாஹ் நம் அனைவருக்கும் அதற்கும் நற்பேறு வழங்குவானாக. மேலும் ரமலானின் அருட்களிலிருந்து பயனடைவதற்கு நற்பேறு வழங்குவானாக.

(அல்ஃபஸ்ல் தினசரி இன்டர்நேஷனல் பத்திரிகை, 7 ஏப்ரல், 2023, பக்கம் 2-7)

தமிழாக்கம் - மவ்லவி A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

**உங்களுக்கு வேலையாட்கள் வேண்டுமா?**

உங்களுக்கு டிரைவர், மேஸ்திரி, மெக்கானிக், எலக்ட்ரீசியன் தேவையென்றால் எங்களை தொடர்பு கொள்ளவும்.

**நாங்கள் உங்களுக்கு நம்பிக்கையான, நல்ல வேலையாட்களை ஏற்பாடு செய்துகொடுப்போம்.**

KHAIRUL-ISLAM
JAYGON-WEST BENGAL 97348 44732

**வல்லமை மிக்க ஏக இறைவனின் இருப்பை ஒப்புக் கொள்ளாத வரை உண்மையான அமைதி நிலை பெற முடியாது**

**அமைதி நல்கக் கூடியவன் அல்லாஹ் ஆவான் என்ற கொள்கையை இஸ்லாம் மட்டுமே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) மூலமாக முன்வைத்துள்ளது.**

**ஐரோப்பாவில் வசிப்பவர்களே! நீங்களும் பாதுகாப்பாக இல்லை. ஆசியாவில் வசிப்பவர்களே! நீங்களும் பாதுகாப்பாக இல்லை. தீவுகளில் வசிப்பவர்களே! எந்த செயற்கை இறைவனும் உங்களுக்கு உதவி செய்ய மாட்டான். நான் நகரங்கள் வீழ்வதையும் காண்கின்றேன். வசிப்பிடங்கள் வெறிச்சோடிக் கிடப்பதையும் காண்கின்றேன்.**
**( ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) )**

**மக்களிடத்தில் உண்மையான சகோதரத்துவம் உருவாகாதவரை (உலகில்) அமைதி நிலைபெற முடியாது**
**ஏக இறைவனை ஒப்புக் கொள்ளாத வரை உண்மையான சகோதரத்துவம் உருவாக முடியாது**
**உலகிற்கு கூறுங்கள். இன்று உலகின் அமைதி மற்றும் பாதுகாப்பிற்கு இது மட்டுமே தீர்வாகும்.**
**எனவே வாருங்கள்! அமைதி மற்றும் சமாதானத்திற்கான போதனை நல்கக்கூடிய அந்த மகத்துவ மிக்க நபருடன் இணைந்து இம்மை மற்றும் மறுமையின் பாதுகாப்பிற்கான ஏற்பாட்டை செய்து கொள்ளுங்கள் என்று உலகிற்கு கூறுங்கள்.**
**தமது நடத்தையை இஸ்லாமிய போதனைகளுக்கு ஏற்ப அமைத்துக் கொண்டு உலகிற்கு சிறந்த முன்மாதிரியாகத் திகழ ஜமாஅத் உறுப்பினர்களுக்கு அறிவுரை**

**ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் நிகழ்த்திய ஜெர்மன் ஆண்டு மாநாட்டின் நிறைவுரை**

**(21 ஆகஸ்ட், 2022 - ஞாயிற்றுக்கிழமை, அய்வானே மஸ்ரூர், இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட், யூ.கே)**

**சென்ற இதழின் தொடர்ச்சி :**

அல்லாஹ்விற்காகவே எல்லாவற்றையும் செய்ய வேண்டும் என்ற கொள்கையில் மனிதன் நிலைபெற்றுவிடும்போதுதான் உண்மையான அமைதி நிலை பெற முடியும். இல்லையென்றால் முடியாது.

எனவே அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாக நமக்கு இந்த இறைப் பண்புகளை கற்றுத் தந்துள்ளான். அதாவது அவன் اَلۡمَلِکُ الۡقُدُّوۡسُ السَّلٰمُ الۡمُؤۡمِنُ ஆவான். (அல்ஹஷ்ர்: 24) பொருள்: அவன் அரசன் ஆவான். அவன் மற்றவர்களை தூய்மைப்படுத்துபவன் ஆவான். மேலும் அவன் சுயமே எல்லா குறைகளிலிருந்தும் தூயவன் ஆவான். மேலும் மற்றவர்களுக்கு பாதுகாப்பு அளிப்பவன்: எல்லாருக்கும் அமைதி நல்குபவன் ஆவான்.

அல்லாஹ் اَلۡمَلِکُ الۡقُدُّوۡسُ السَّلٰمُ الۡمُؤۡمِنُ என்று கூறி மனித எண்ணங்களை தூய்மைப்படுத்திவிட்டான். எண்ணங்கள் தூய்மையாக இல்லாத வரை பணியும் சரியாக இருக்க முடியாது என்பது உறுதியான விஷயமாகும். எண்ணமே சரியானதாக இல்லையென்றால் பணியில் எவ்வாறு பரக்கத் ஏற்பட முடியும். எண்ணங்கள் சரியானதாக இருக்காத வரை ஒருபோதும் பணி சரியானதாக இருக்கவே முடியாது என்பதை எந்நிலையிலும் நினைவிற் கொள்ள வேண்டும்.

மனிதனின் நோக்கங்கள் தூய்மையானவையாக இல்லை. உலகில் இன்று எவ்வளவு சண்டைகளும் குழப்பங்களும் நிலவுகின்றனவோ அவை அனைத்திற்கும் இதுவே காரணமாகும்.

மக்களில் நாவினால் என்ன விஷயங்களை பேசுகின்றனரோ அவற்றிற்கு ஏற்ப அவர்களின் விருப்பங்கள் இருப்பதில்லை. அவர்களின் விருப்பங்களுக்கு ஏற்ப அவர்களின் கூற்றும், செயலும் இல்லை. மேலும் உலகின் இந்த குழப்பத்தில் வல்லரசுகள் மற்றும் முன்னேற்றமடைந்த நாடுகள் என்றழைக்கப்படும் சமுதாயங்களின் பங்கு அதிகம் இருக்கின்றது. இன்று சந்தேகமின்றி உலகம் போரை தீயதாக கூறுகின்றது. போர் தீயதாகும் என்பதே அனைத்து தலைவர்களின் கூற்றாக உள்ளது. ஆனால் அதன் பொருள் இது மட்டுமே ஆகும். அதாவது, தங்களுக்கு எதிராக ஒருவர் போரிட்டால் அது தீயது ஆகும் என்பதே அதன் பொருள் ஆகும். ஆனால், தங்கள் தரப்பிலிருந்து போருக்கான துவக்கம் அமைந்தால் பின்னர் அது எந்த தீமையும் கிடையாது. இந்த குறைபாட்டிற்கான காரணம் இதுவாகும். அதாவது அமைதி நல்குபவன் மற்றும் பாதுகாப்பு அளிக்கக்கூடியவனான அந்த இறைவனின் பக்கம் அந்த மக்களின் பார்வை இல்லை. நமக்கு எதுவரை நன்மை இருக்குமோ அதுவரை அமைதிக்கான முழக்கமிடுவதற்கான பணியை செய்து வருவோம். ஆனால் நமது நலனுக்கு எதிராக விஷயம் வந்துவிட்டால் பின்னர் நாம் மறுத்துவிடுவோம் என்று அவர்கள் கருதுகின்றனர். எங்களின் எதிரிக்கு ஒருவர் உதவி செய்தால் மேலும் அவருக்கு ஆயுதம் கொடுத்தால் பின்னர் அது எந்நிலையிலும் ஏற்றுக் கொள்ளத்தக்கது அல்ல. ஆனால், நாங்கள் ஒருவருக்கு ஆயுதம் கொடுத்து அது அநீதி இழைப்பதற்கு பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருந்தால் அது ஆகுமானதாகும் என்பது அவர்களின் சிந்தனையாகும். இப்படிப்பட்ட சிந்தனை இருக்குமென்றால் பின்னர் உண்மையான அமைதி எவ்வாறு நிலை பெற முடியும்?

எனவே உலகிற்கு ஒரே இறைவனே உள்ளான். அனைத்து மக்களும் அமைதியுடன் வாழ வேண்டும் என்றே அவன் விரும்புகின்றான் என்ற இதே கொள்கையின் கீழ் வரும்போதும் அதன்படி செயல்படும்போதும்தான் உண்மையான அமைதியை (உலகில்) கொண்டு வர முடியும். இந்த கொள்கை இருக்கும்போது, அதன்படி செயல்படும்போது பின்னர் மனிதனின் விருப்பங்கள் சுயநலத்திற்கு அப்பாற்பட்டதாக இருக்கும். இன்னும்கூறப்போனால், உலகிற்கு பொதுவான நன்மைகளை பயக்கக்கூடியதாக இருக்கும். இந்த எண்ணம் இருக்கும்போது பின்னர் நமது சிந்தனைகளும், அமைதியை நிலைநாட்டுவதற்கான தரமும் மிக உயர்ந்ததாக இருக்கும். அந்நிலையில், இன்ன விஷயத்தால் நமக்கு பயன் கிடைக்கின்றதா? இல்லையா ? என்று நாம் பார்க்க மாட்டோம். மாறாக, முழு உலகத்தின் மீதும் அதனால் ஏற்படும் தாக்கம் என்ன? என்று நாம் பார்ப்போம். உலகவாதிகள் எப்போதும் தங்களின் நலனுக்காக மற்றவர்களின் அமைதியை சீர்குலைத்து வருகின்றனர். ஆனால், ஓர் ஏக இறைவன் இருக்கின்றான் என்ற கொள்கையை கொண்டவர்களாக எவர்கள் இருக்கின்றனரோ அவர்கள் ஒருபோதும் அதற்கு துணியமாட்டார்கள். ஏனெனில், நாம் அவ்வாறு செய்தால் அந்த உயர்வான இறைவன் நம்மை அழித்து விடுவான் என்பதை அவர்கள் அறிந்திருக்கின்றனர்.

சுருக்கமாக, மகத்துவ மிக்க ஏக இறைவனை ஒப்புக் கொள்ளாத வரையிலும், உள்ளத்தில் அவன் மீதான அன்பு உருவாகாத வரையிலும் உண்மையான அமைதி நிலை பெற முடியாது. அல்லாஹ் அமைதி அளிப்பவன் ஆவான் என்ற இந்தக் கொள்கையை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாக இஸ்லாம் மட்டுமே முன்வைத்துள்ளது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது இறங்கிய வேதத்தில் அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

قَدۡ جَآءَکُمۡ مِّنَ اللّٰہِ نُوۡرٌ وَّ کِتٰبٌ مُّبِیۡنٌ۔

یَّہۡدِیۡ بِہِ اللّٰہُ مَنِ اتَّبَعَ رِضۡوَانَہٗ سُبُلَ السَّلٰمِ

(அல்மாயிதா: 16- 17) நிச்சயமாக உங்களிடத்தில் அல்லாஹ்விடமிருந்து ஓர் ஒளியும், ஓர் ஒளிமிக்க வேதமும் வந்துவிட்டது. எவர் இறைவனது திருப்தியை பின்பற்றி நடக்கின்றாரோ அவருக்கு அல்லாஹ் அதன் மூலமாக அமைதியின் வழிகளின் பக்கம் வழிகாட்டுகின்றான்.

எனவே அல்லாஹ் ஒளிமிக்க வழிகாட்டலை அனுப்பிவிட்டான். மேலும்,

அதில் அமைதிக்கான வழிகளைக் குறித்து தெளிவாக வழிகாட்டல் வழங்கியும் விட்டான். தற்போது எந்த மக்கள் அதனை முழுமையாக பின்பற்றி நடப்பார்களோ அவர்களே அமைதியின் வழிகளைப் பெறக்கூடியவர்களாக இருப்பார்கள். இன்று முஸ்லிம்களுக்கு மத்தியில் குழப்பத்திற்கான சூழல் உள்ளது. அவர்களுக்குள் போர்களுக்கான சூழல் நிலவுகிறது. எனவே தெளிவுபடுத்திக் கொள்கின்றேன். (முஸ்லிம்களாகிய) அவர்கள் அல்லாஹ்வால் வழங்கப்பட்ட மற்றும் அனுப்பப்பட்ட வேதத்தையும், ஒளியையும் உண்மையான முறையில் பின்பற்றவில்லை. நாங்கள் இறைத் தூதர் (ஸல்) அவர்கள் மீது அன்பு கொள்கின்றோம் என்று நிச்சயமாக அவர்கள் வாதம் செய்கின்றனர். ஆனால் செயல் அதற்கு எதிராக உள்ளது. அல்லாஹ்வின் கூற்று ஒருபோதும் தவறாக ஆக முடியாது. அல்லாஹ் கூறிய விஷயம் ஒருபோதும் தவறாக இருக்க முடியாது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கூற்றுகள் ஒருபோதும் தவறாக இருக்க முடியாது.

முஸ்லிம்களுக்கு மத்தியில் குழப்பம் உள்ளதென்றால் பின்னர் இது தெளிவான விஷயம் ஆகும். அதாவது, அவர்கள் அந்த தெளிவான வேதத்தை ஒப்புக் கொள்வதாக வாதம் நிச்சயமாக செய்கின்றனர். ஆனால், அல்லாஹ் இறக்கிய அந்த போதனையை பின்பற்றி அவர்கள் நடக்கவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) மீது அன்பிற்கான வாதம் நிச்சயமாக செய்யப்படுகின்றது. ஆனால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியின்படியும், போதனையின்படியும் அவர்கள் செயல்படவில்லை.

எனவே, அந்த போதனையை தமது வாழ்க்கையின் அங்கமாக ஆக்குவது இன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மை பேரன்பரை ஏற்றுக் கொண்டவர்களின் பணியாகும். திருக்குர்ஆனின் கட்டளைகளின் படி அமல் செய்யுங்கள். அப்போதுதான் உங்களது சமூகத்தில் அமைதியை உருவாக்க முடியும். மேலும் உலகிற்கும் அமைதியின் தூதுச் செய்தியை எட்ட வைக்க முடியும். இல்லையென்றால், முதலில் உங்களது சொல்லையும், செயலையும் ஒன்றாக வையுங்கள் பிறகு எங்களுக்கு அறிவுரை செய்யுங்கள் என்று உலகம் கூறும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்: தற்போது வானத்தின் கீழ் ஒரேயொரு நபியும், ஒரேயொரு வேதமும் மட்டுமே உள்ளது. அதாவது அனைத்து நபிமார்களிலும் உயர்ந்தவரும், சிறந்தவரும் மேலும் அனைத்து தூதர்களிலும் முழுமையானவரும் நிறைவானவரும் மேலும் காத்தமுல் அன்பியா மற்றும் மக்களில் மிகச் சிறந்தவரும் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் ஆவார்கள். அன்னாரை பின்பற்றுவதனால் இறைவன் கிடைக்கின்றான். இருள்களின் திரைகள் அகற்றப்படுகின்றன. மேலும், உண்மையான மற்றும் முழுமையான வழிகாட்டல்கள் மற்றும் தாக்கங்களை உள்ளடக்கியுள்ள வேதம் திருக்குர்ஆன் ஆகும். அதன் மூலமாக உண்மையான அறிவுகளும், இறைஞானமும் கிடைக்கின்றன. மேலும் மனிதஇயல்பின் அழுக்குகளிலிருந்து உள்ளம் தூய்மையடைகின்றது. மேலும் மனிதன் அறிவீனம், கவனமின்மை மற்றும் மனயிச்சைகளின் திரைகளிலிருந்து இரட்சிப்பு பெற்று அனுபவ அறிவு என்ற அந்தஸ்தை அடைந்து விடுகின்றான். (பராஹீனே அஹ்மதிய்யா, ரூஹானீ கஸாயீன், தொகுதி 1, பக்கம் 557 -558, அடிக்குறிப்பு)

எனவே அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) என்ற தனது ஒளியையும், திருக்குர்ஆன் என்ற ஒளிமயமான வேதம் மற்றும் அனைத்து அறிவுகள் மற்றும் ஞானங்களின் தலையாய ஊற்றையும் ஒளிமயமான வழிகாட்டலையும் வழங்கியுள்ளான். மேலும் திருக்குர்ஆன் அமைதிக்கான தூதுச் செய்தியாகும். அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) மற்றும் திருக்குர்ஆனை வழங்கி மனிதகுலத்தின் மீது மாபெரும் கருணை செய்துள்ளான். மனிதன் அதிலிருந்து பயனடையவில்லையென்றால், மேலும் தன்னை அழிக்கக்கூடிய சுயநலம் மிக்க வழிகளில் அவன் அடைபட்டு கிடப்பானேயென்றால் பின்னர் அதை விட துரதிஷ்டம் வேறு என்னவாக இருக்க முடியும்?

எனவே, உங்களது இம்மையையும், மறுமையையும் சீர்படுத்த வேண்டும் என்றால், மேலும் அமைதியுடனும், நிம்மதியுடனும் வாழ வேண்டும் என்றால், பின்னர் நாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது இறங்கிய அல்லாஹ்வின் அந்த வேதத்தை கருத்தில் கொள்ள வேண்டும். அந்த வேதம் கூறுகின்றது:

يَّهۡدِىۡ بِهِ اللّٰهُ مَنِ اتَّبَعَ رِضۡوَانَهٗ سُبُلَ السَّلٰمِ

அதாவது, இந்த ஒளிமயமான வேதத்தின் வழிகாட்டல்களை எப்போதும் நீங்கள் கருத்தில் கொள்ளுங்கள். இந்த ஒளிமயமான வேதத்தின் வழிகாட்டலை ஓதுங்கள். மேலும் அதனை நீங்கள் கருத்தில் கொள்ள வேண்டும். அப்போதுதான் அமைதியின் வழியில் செல்லக்கூடியவர்களாக நீங்கள் திகழ்வீர்கள்.

மனிதகுலத்தின் அமைதியை சீர்குலைக்கக்கூடிய எந்தவொரு போதனையும் அந்த வேதத்தில் இல்லை. எனவே இதுவே தூதுச் செய்தியாகும். இதனை நம்மவர்களுக்கும், அந்நியர்களுக்கும் எட்ட வைப்பது நமது பணியாகும். இன்று இதுவே உலகின் அமைதிக்கான உத்திரவாதம் ஆகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது ஸஹாபிகளிடத்தில் உருவாக்கிய அந்த புரட்சி இதுவேயாகும். செயல் ரீதியாக அன்னார் (ஸல்)

اِذَا خَاطَبَهُمُ الۡجٰهِلُوۡنَ قَالُوۡا سَلٰمًا

(அல்ஃபுர்கான்:64) என்ற வசனத்தில் கூறப்பட்டுள்ளதற்கு ஏற்ப ஒரு ஜமாஅத்தை உருவாக்கினார்கள். அதாவது, அறிவீனர்கள் தங்களிடம் தர்க்கம் செய்தால் (ஸஹாபிகளாகிய) அவர்கள் ஸலாம் என்று கூறிவிடுவார்கள். ஆக, திருக்குர்ஆனின் இந்தக் கூற்றை உண்மைப்படுத்தக்கூடிய மக்களை அன்னார் (ஸல்) உருவாக்கினார்கள். ஆக, இந்த நிலைமை நம்மிடம் உருவாகிவிட்டால் பின்னர் நாம் உலகில் அமைதியை உருவாக்குவோம். மேலும் நமது நிகழ்காலமும் பாதுகாப்பானதாக இருக்கும். நமது எதிர்காலமும் பாதுகாப்பானதாக இருக்கும்.

எனவே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டவர்களின் ஒரு மாபெரும் பணி என்னவென்றால், அவர்கள் தங்களது குடும்பங்களிலும், தங்களது சுற்றுப்புறத்திலும் அமைதியையும், நிம்மதியையும் உருவாக்க வேண்டும். மேலும் உலகிலும் அமைதியையும், நிம்மதியையும் உருவாக்க வேண்டும்.

நமது உள்ளம் முற்றிலும் ஏகத்துவத்தால் நிறைந்திருக்கும்போது மட்டும்தான் இந்த பணி நடைபெறும். மேலும் அப்போதுதான் உலகையும் உண்மையான ஏகத்துவத்தின் பக்கம் கொண்டுவரக் கூடியவர்களாக நாம் திகழ முடியும். முழுமையான ஏகத்துவத்தை நிலைபெறச் செய்யாமல் அமைதியை நிலைநாட்ட முடியாது என்ற இந்த விஷயம் உறுதியானதாகும். முன்னரும் கூறப்பட்டுவிட்டது. அதாவது, எவ்வாறுஇருப்பினும் மகத்தான அந்த ஏக இறைவனை ஒப்புக் கொள்ள நேரிடும். அந்த மகத்துவ மிக்க உயர்வான இருப்பு என்பது அல்லாஹ் ஆவான். ஏகத்துவத்தை உள்ளத்தில் நிலைநாட்டாமல் அவனது நினைவு தோன்ற முடியாது. ஏகத்துவம் நிலைபெறாமல் இருக்குமென்றால் பின்னர் போர்களும் நடைபெற்றுக் கொண்டே இருக்கும். உண்மையான சகோதரத்துவம் உருவாகும்போதும், தங்களுக்குள் பரஸ்பரம் அன்பு, நேசம் உருவாகும்போதும், மேலும் சகோதரத்துவத்திற்கான சூழல் உருவாகும்போதும் தான் போர்கள் முடிவுக்கு வர முடியும்.

மக்களுக்கு மத்தியில் உண்மையான சகோதரத்துவம் உருவாகாத வரை அமைதியை நிலைநாட்ட முடியாது. உண்மையான சகோதரத்துவம் ஏக இறைவனை ஒப்புக் கொள்ளாத வரையிலும், ஏக இறைவனுடன் தொடர்பை உருவாக்கிக் கொள்ளாத வரையிலும் உருவாக முடியாது. வெறும் ஏற்றுக் கொண்டால் மட்டும் போதாது. மாறாக, அந்த ஏக இறைவனுடன் ஒரு தொடர்பையும் உருவாக்க வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாகவே அதற்கான போதனைகள் நமக்கு கிடைத்துள்ளன.

ஆக, اَلۡحَمۡدُ لِلّٰهِ رَبِّ الۡعٰلَمِيۡنَ ۙ என்ற போதனையை நமக்கு அல்லாஹ் திருக்குர்ஆனில் வழங்கியுள்ளான். மேலும், ஒவ்வொரு தொழுகையிலும் அதனை ஓதுவதற்கான கட்டளையும் வழங்கப்பட்டுள்ளது. அதாவது முஸ்லிம்களிடத்தில் சகோதரத்துவத்திற்கான பரந்த சிந்தனை நிலைபெறவேண்டும் என்று

அவன் கட்டளையிட்டுள்ளான். ٱلْحَمْدُ لِلَّهِ رَبِّ ٱلْعَٰلَمِينَ என்று ஓதுவதினால் அல்லாஹ்வின் ரூபூபிய்யத் பண்பு அனைத்து உலகிலும் பரந்துபட்டதாக உள்ளது என்ற புரிதல் உருவாகின்றது. இந்த சொற்களை ஓதுவதனால் மனித சிந்தனை விரிவடைகின்றது. மேலும் அனைத்து உலகங்களுக்கும் இறைவனாக திகழும் அந்த இறைவனை அவன் புகழ்கின்றான். அந்த இறைவன் கிறித்தவர்களின் இறைவனும் ஆவான். இந்துக்களின் இறைவனும் ஆவான். யூதர்களின் இறைவனும் ஆவான். ஒவ்வொருவரின் இறைவனும் ஆவான். இந்த சொற்களை மனிதன் ஓதும்போது பின்னர் ஒருவரிடம் வெறுப்பு எவ்வாறு உருவாக முடியும்?

நான் ஒருமுறை இதே விஷயத்தை அமெரிக்காவில் அந்நியர்களின் சபையில் எடுத்துரைத்தேன். அப்போது இது எவ்வளவு மகத்தான போதனை ஆகும்! என்று அந்த மக்கள் கூறினர். உள்ளபடியே இஸ்லாத்தின் போதனை அப்படிப்பட்டதுதான். அது ஒருபோதும் ஓர் உண்மையான முஸ்லிமின் உள்ளத்தில் மற்றவர்கள் மீது வெறுப்பை உருவாக்கவே முடியாது. رَبِّ ٱلْعَٰلَمِينَ என்ற சொல் எல்லாவற்றையும் சூழ்ந்துவிட்டது. இந்த விஷயமே அமைதியை பரப்புவதற்கு மிகப் பெரிய மற்றும் பரந்த வழிகளை திறக்கின்றது.

ٱلْحَمْدُ لِلَّهِ رَبِّ ٱلْعَٰلَمِينَ என்பதில் இந்த விஷயம் கூறப்பட்டுள்ளது. அதாவது, உண்மையான ஏகத்துவம் நிலைபெற்றுவிட்டால் மேலும் ரப்புல் ஆலமினான இறைவனின் புகழை மனித நாவு உச்சரித்துக் கொண்டிருந்தால் பின்னர் எந்தவொரு சமுதாயத்தின் மீதும் பகைமை மனித உள்ளத்தில் உருவாகுவதற்கு சாத்தியமே கிடையாது. கிறித்தவர்கள் மீதும், இந்துக்கள் மீதும், யூதர்கள் மீதும் எவர் மீதும் உள்ளத்தில் பகைமை உருவாக முடியாது.

இது எவ்வாறு நிகழ முடியும்? அதாவது, ஒருபக்கம் அவர்கள் அழிய வேண்டும் என்று அவர் ஆசை கொள்வதும், மற்றொரு பக்கம் அவர்களைக் கண்டு அல்லாஹ்வின் புகழையும், மேன்மையையும் எடுத்துரைப்பதும் எவ்வாறு சாத்தியம் ஆகும். இது நடைபெறவே முடியாது. எனவே, உண்மையான ஏகத்துவ வாதியே உண்மையான அமைதி மற்றும் பாதுகாப்பிற்கான கொடியை ஏந்தி நிற்க முடியும். முஸ்லிம்கள் இந்த கருத்தை புரிந்து கொண்டால் மேலும் அதற்கேற்ப தங்களது வாழ்க்கையை அமைத்துக் கொண்டால் உலகில் உண்மையான அமைதியை விரும்பக்கூடியவர்களாக அவர்களே இருப்பார்கள். ஆனால், பின்னர் விஷயம் மீண்டும் இங்கு வந்து நிற்கின்றது. அதாவது, அதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பருடன் இணைவது அவசியமாகும். அப்போதுதான் அறிவு மற்றும் ஞானத்திற்கான சரியான புரிதலும் இருக்க முடியும்.

ஆயினும் அத்துடன் நான் இதனையும் கூறுவேன். அதாவது இந்த நிலை நம் மீதும் பொறுப்புகளை சுமத்துகின்றது. அதாவது நாம் நமது நிலைமைகளை ஆய்வு செய்து வரவேண்டும். அவ்வாறு செய்யவில்லையென்றால் ٱلْحَمْدُ لِلَّهِ رَبِّ ٱلْعَٰلَمِينَ என்று நமது தொழுகைகளில் நாம் ஓதுவது வெறும் வாய் கூற்றாக இருக்கும். உள்ளம் அதன் ஆழத்திலிருந்து வெறுமையாக இருக்கும். உள்ளமும், மூளையும் அதன் ஆழத்திலிருந்து வெறுமையாக இருக்குமென்றால் பின்னர் நாமும் குழப்பங்களை உருவாக்கக்கூடியவர்களை சார்ந்தவர்களாக இருப்போம். அமைதியையும், நிம்மதியையும் பரப்பக்கூடியவர்களாகவும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கொண்டு வந்துள்ள போதனையை பின்பற்றி நடப்பவர்களாகவும் நாம் இருக்க மாட்டோம்.

எனவே மிகவும் சிந்திக்க வேண்டிய இடமாகும். மிகவும் சீர்தூக்கிப் பார்ப்பதற்கான அவசியம் உள்ளது. மிகவும் கவலைபட வேண்டிய இடமாகும். உண்மையான அமைதியை உலகில் உருவாக்குவதற்காக ஏக இறைவனின் மீதான தனது ஈமானை உறுதிபடுத்துவதும், வேறு எந்த ஒரு நேசமும் உள்ளத்தில் இடம் பெற முடியாத அளவிற்கு ஏக இறைவனின் மீதான நேசத்தை தமது உள்ளங்களில் உறுதியாக்கிக் கொள்வதும் இன்று ஒவ்வொரு அஹ்மதியின் பணியாகும். மேலும், அவனது கட்டளைகளின்படி அமல் செய்வதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது இறங்கிய போதனை அதாவது திருக்குர்ஆனை தங்களது வாழ்வின் அங்கமாக அவர்கள் ஆக்கிக் கொள்ள வேண்டும். நமது தரம் இந்த அந்தஸ்தை அடைந்துவிட வேண்டும். அதாவது திருக்குர்ஆனின் ஒவ்வொரு கட்டளையும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் ஒவ்வொரு வழிகாட்டலும் நமது சொல் மற்றும் செயலின் அங்கமாக ஆகிவிட வேண்டும். அப்போதுதான் நாம் உலகிற்கு இஸ்லாத்தின் உண்மையான தூதுச் செய்தியை எட்ட வைக்க முடியும். அந்நிலையில் நாம் அமைதிக்கான வழிமுறைகளை போதனையின் வடிவில் மட்டும் அவர்களுக்கு முன்வைக்க மாட்டோம். மாறாக, நமது செயலாலும் கற்றுக் கொடுப்போம். இதுவே உலகில் உண்மையான அமைதியை நிலைநாட்டுவதற்கான வழிமுறையாகும். மேலும் இதுவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை உலக அமைதிக்கான மகத்துவமிக்க இருப்பாக நிறுவுவதற்கான வழிமுறையாகும். மேலும், இதுவே இஸ்லாத்தின் மீது ஆட்சேபனை செய்யக் கூடியவர்களின் வாயை அடைக்கச் செய்வதற்கான வழிமுறையாகும்.

எவ்வாறுஇருப்பினும் இன்று இந்தப் பணி வாக்களிக்கப்பட்ட மஸீஹின் ஜமாஅத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. வீடுகளிலிருந்து சர்வதேச அளவு வரை நாம் அதற்கேற்ப செயல்படவில்லையென்றால் பின்னர் நாம் அமைதியுடனும், பாதுகாப்புடனும் வசிப்பதற்கு எந்த உத்திரவாதமும் இல்லை. நமது சந்ததிகள் அமைதி மற்றும் பாதுகாப்புடன் வசிப்பதற்கும் எந்த உத்திரவாதமும் இல்லை. மேலும் உலகின் அமைதி மற்றும் பாதுகாப்பிற்கும் எந்த உத்திரவாதமும் இல்லை. அல்லாஹ் நம்மை இருள்களிலிருந்து ஒளியின் பக்கம் கொண்டு செல்வதற்கான வழிமுறையாக நம்மை ஆக்குவானாக. அல்லாஹ் அழகிய முறையில் நமது கடமைகளை நிறைவேற்றுவதற்கான நற்பேறை நமக்கு வழங்குவானாக.

தற்போது நாம் துஆ செய்வோம். ஜல்ஸாவில் கலந்து கொள்ளக்கூடியவர்களை ஜல்ஸாவின் அருட்களை பெறக்கூடியவர்களாக அல்லாஹ் ஆக்குவதற்கு துஆ செய்யுங்கள். மேலும் எல்லாரையும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் துஆக்களுக்கு வாரிசுகளாக ஆக்குவதற்காக துஆ செய்யுங்கள்.

அல்லாஹ் உலகின் சூழல்களில் விரைவாக எல்லா புறமிருந்தும் அமைதியையும் பாதுகாப்பையும் உருவாக்குவானாக. அப்போதுதான் நாம் நமது ஜல்ஸாக்களை மீண்டும் பரந்துபட்ட அளவிலும், மீண்டும் பழைய பொலிவுடனும், எல்லா வகையான கவலைகளிலிருந்து விடுபட்டவாறும் ஜல்ஸா நடத்த ஏதுவாக அமையும். மேலும், நமது ஆன்மீக மற்றும் அறிவார்ந்த தாகத்தை தணித்துக் கொள்வதற்கான வழிமுறையாக அல்லாஹ் ஜல்ஸாக்களை ஆக்குவானாக. மேலும், உண்மையில் நமது வாழ்க்கையை இஸ்லாத்தின் போதனைக்கேற்ப ஆக்கிக் கொள்வதற்கான வழிமுறையாக ஆக்குவானாக. அல்லாஹ்வின் அன்பையும் அவனது நேசத்தையும் ஈர்த்துக் கொள்ளக்கூடியவர்களாக அல்லாஹ் நம்மை ஆக்குவானாக. அல்லாஹ் நமக்கு அதற்கான நற்பேறை வழங்குவானாக. துஆ செய்யுங்கள். (என்று கூறி ஹுஸுர் துஆ செய்தார்கள்).

துஆவிற்கு பிறகு ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) கூறினார்கள்.

ஜெர்மனி ஜல்ஸாவில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கையை முதலில் கேளுங்கள். பின்னர் முழுக்கமிடுங்கள். கூறுகின்றார்கள்: ஜல்ஸாவில் கலந்து கொண்டவர்களின் மொத்த எண்ணிக்கை 19,782 ஆகும். அதில் பெண்களின் எண்ணிக்கை 9,482 ஆகும். ஆண்களின் எண்ணிக்கை 10,300 ஆகும். இது மட்டுமின்றி, மற்ற வழிமுறைகளின் மூலமாகவும் மக்கள் ஜல்ஸா ஸாலானாவின் நிகழ்ச்சிகளை பார்த்து வருகின்றனர் அல்லது கேட்டு வருகின்றனர். அவர்களின் எண்ணிக்கையும் 40000-ஐயும் விட கூடுதல் ஆகும். சரி! இனி நீங்கள் நடத்த வேண்டிய அடுத்த நிகழ்ச்சியை நடத்துங்கள்.

(நன்றி: அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல் பத்திரிகை, டிசம்பர் 27, 2022)

தமிழாக்கம் : மவ்லவி A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

# ஜுமுஆ பேருரை

**இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் மார்க்கத்தின் சீர்திருத்தத்திற்காக இறைவன் புறமிருந்து தோன்றவிருந்தவர் நானே ஆவேன். பூமியிலிருந்து காணாமல் போன அந்த ஈமானை மீண்டும் நிலைநாட்டுவதற்காகவும், இறைவனிடமிருந்து ஆற்றல் பெற்று அவனது கரத்தின் ஈர்ப்புச் சக்தியால் உலகை சீர்திருத்தம், இறையச்சம் மற்றும் உண்மையின் பக்கம் ஈர்ப்பதற்காகவும், அவர்களின் கொள்கை மற்றும் செயல் தவறுகளை அகற்றுவதற்காகவும் நான் தோன்றியுள்ளேன் ( ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள்)**

**மற்றொரு கூட்டம் உள்ளது. அது இறுதி காலத்தில் வெளிப்படும். அவர்களும் முதலில் இருளிலும், வழிகேட்டிலும் இருப்பார்கள். மேலும் அறிவு, நுட்பமான ஞானம் மற்றும் நம்பிக்கையிலிருந்து வெகு தொலைவில் இருப்பார்கள். அப்போது இறைவன் அவர்களையும் ஸஹாபிகளின் வடிவில் கொண்டு வருவான்**

**எந்த நிலையில் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் பாரசீக வம்சாவளியைச் சேர்ந்தவரின் காலம் ஒன்றாக உள்ளதோ அதேபோன்று பணியும் ஒன்றே ஆகும். அதாவது ஈமானை மீண்டும் பூமியில் நிலைநாட்டுவது ஆகும். எனவே வாக்களிக்கப்பட்ட மஸீஹே பாரசீக வம்சாவளியைச் சேர்ந்தவர் ஆவார் என்பது உறுதியாக நிரூபணம் ஆகின்றது. அவரது ஜமாஅத்திற்கு ஆதரவாக وَاٰخَرِيْنَ مِنْهُمْ لَمَّا يَلْحَقُوْا بِهِمْ என்ற வசனம் உள்ளது**

**இரண்டாவது கூட்டம் மேற்கூறப்பட்ட வசனத்திற்கேற்ப ஸஹாபிகளுக்கு ஒப்பான கூட்டம் ஆகும். அந்தக் கூட்டம் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் கூட்டம் ஆகும். ஏனெனில், இந்தக் கூட்டமும் ஸஹாபிகளைப் போன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அற்புதங்களை பார்க்கக் கூடியது ஆகும். மேலும் இருள் மற்றும் வழிகேட்டிற்கு பிறகு நேர்வழிப் பெறக்கூடியக் கூட்டம் ஆகும். மேலும் اٰخَرِيْنَ مِنْهُمْ என்ற வசனத்தில் அந்தக் கூட்டத்தினருக்கு مِنْهُمْ என்ற செல்வத்தில் அதாவது ஸஹாபிகளுடன் ஒப்புமை பெறக்கூடிய அருட்கொடையிலிருந்து பங்கு வழங்கப்பட்டுள்ளது**

**இறைவன் என்னை பதினாங்காம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஈமானை புதுப்பிப்பதற்காகவும், இறைஞானத்தை வழங்குவதற்காகவும் அனுப்பியுள்ளான். மேலும், அவனது உதவி மற்றும் அருளால் எனது கரத்தில் விண்ணின் அடையாளங்கள் வெளிப்படுகின்றன. மேலும் அவனது நாட்டம் மற்றும் விருப்பத்திற்கு ஏற்ப (எனது) துஆக்களும் ஒப்புக் கொள்ளப்படுகின்றன (ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள்)**

**மார்ச் 23 ஆம் நாள் அஹ்மதிய்யா ஜமாஅத்தில் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் தினமாக அறியப்படுகின்றது. நேற்று மார்ச் 23 ஆம் நாளாக இருந்தது. அல்லாஹ் தனது வாக்குறுதிக்கேற்பவும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கேற்பவும் அனுப்பியுள்ள காலத்தின் இமாம், வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் உறுதி மொழி வழங்கப்பட்ட மஹ்தியை ஒப்புக் கொள்வதற்கான நற்பேறை அல்லாஹ் நமக்கு வழங்கியுள்ளான்**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 24 மார்ச் 2023** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ஆண்டு **அமான்** மாதம் **24ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

هُوَ الَّذِیْ بَعَثَ فِی الْاُمِّیّٖنَ رَسُوْلًا مِّنْهُمْ یَتْلُوْا عَلَیْهِمْ
اٰیٰتِهٖ وَ یُزَكِّیْهِمْ وَ یُعَلِّمُهُمُ الْكِتٰبَ وَ الْحِكْمَةَ وَ
اِنْ كَانُوْا مِنْ قَبْلُ لَفِیْ ضَلٰلٍ مُّبِیْنٍ
وَّ اٰخَرِیْنَ مِنْهُمْ لَمَّا یَلْحَقُوْا بِهِمْ وَ هُوَ الْعَزِیْزُ الْحَكِیْمُ

இந்த வசனங்களின் பொருள்: அவனே எழுதப்படிக்கத் தெரியாத மக்களிலிருந்து ஒரு மகத்துவ மிக்க தூதரை அனுப்பினான். அவர் அவனது வசனங்களை அவர்களிடம் ஓதிக் காட்டுகிறார். மேலும் அவர்களை தூய்மைப்படுத்துகின்றார். அவர் அவர்களுக்கு வேதத்தையும், நுட்பமான ஞானத்தையும் கற்றுக் கொடுக்கின்றார். அவர்கள் இதற்கு முன்னர் தெளிவான வழிகேட்டில் இருந்தனர். மேலும், இதுவரை அவர்களுடன் சேராத மற்றவர்களுக்கிடையிலும் (அவரை எழுப்புவான்.) அவன் வல்லமை மிக்கவனும், நுண்ணறிவுள்ளவனுமாவான். (அல்ஜுமுஆ: 3-4)

மார்ச் 23ஆம் நாள் அஹ்மதிய்யா ஜமாஅத்தில் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் தினம் என்ற பெயரில் கொண்டாடப்படுகின்றது. நேற்று மார்ச் 23 ஆக இருந்தது. நாம் நற்பேறு பெற்றவர்களாவோம். அதாவது அல்லாஹ்வின் வாக்குறுதிக்கேற்பவும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கேற்பவும் அனுப்பப்பட்ட காலத்தின் இமாம், வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் உறுதி மொழி வழங்கப்பட்ட மஹ்தியை ஏற்றுக் கொள்வதற்கு அல்லாஹ் நமக்கு நற்பேறு வழங்கியுள்ளான். 1889 ஆம் ஆண்டு 23 மார்ச் அன்று லூதியானாவில் அன்னார் (அலை) தூய நபர்களிடம் முதல் பைஅத்தை வாங்கினார்கள். மேலும் இவ்வாறு தூயவர்களின் ஒரு ஜமாஅத் நிறுவப்பட்டது. நான் ஓதிய திருக்குர்ஆனின் சூரா ஜுமுஆவின் வசனங்களில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மை பேரன்பரின் வருகை மற்றும் அவர் மூலமாக ஒரு ஜமாஅத் நிறுவப்படுவதற்கான செய்தி வழங்கப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி திருக்குர்ஆனில் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் வருகை குறித்து இன்னும் வசனங்கள் உள்ளன. அதுமட்டுமின்றி, ஹதீஸ்களிலும் தோன்றக்கூடிய வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் உறுதி மொழி வழங்கப்பட்ட மஹ்தியின் வருகை குறித்து முன்னறிவிப்புகளும் உள்ளன.

தற்போது நான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சொற்களில் சூரா ஜுமுஆவின் இந்த வசனங்களுக்கான விளக்கத்தையும், மேலும் பல்வேறு சந்தர்ப்பங்களில் கூறப்பட்டுள்ள வரவிருந்த காலத்தின் பல்வேறு அடையாளங்களையும், பல்வேறு முன்னறிவிப்புகளையும், பின்னர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் செய்த வாதத்தையும் நான் சுருக்கமாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சொற்களில் எடுத்துரைப்பேன்.

வசனத்தின் தஃப்ஸீரில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த வசனத்தின் சுருக்கம் இதுவாகும். அதாவது, மக்கள் அறிவு மற்றும் நுட்பமான ஞானம் ஆகியவற்றிலிருந்து முற்றிலும் விலகியிருந்த காலத்திலும், நஃப்ஸ் முழுமையடைவதற்கும், மனித உள்ளங்கள் அறிவு மற்றும் செயல் நிலைகளில் உச்சத்தை அடைவதற்கும் தேவையான மார்க்கத்தின் நுட்பமான அறிவுகள் முற்றிலும் மறைந்துபோன காலத்திலும் தூதரை அனுப்பிய இறைவன் அவனே ஆவான். உள்ளத்தின் சீர்திருத்தத்திற்கான அனைத்து அம்சங்கள் முற்றுபெற்றிருந்தன. மேலும் மக்கள் வழிகேட்டிலேயே மூழ்கியிருந்தனர். அதாவது இறைவன் மற்றும் அவனது நேரான பாதையிலிருந்து வெகு தொலைவில் விலகிச் சென்றிருந்தார்கள். அப்போது அதுபோன்ற காலத்தில் இறைவன் தனது எழுதப்படிக்க தெரியாத தூதரை அனுப்பினான். மேலும் அந்த தூதர் அவர்களின் உள்ளங்களை தூய்மைப்படுத்தினார். மேலும் வேதத்தாலும், நுட்பமான ஞானத்தாலும் அவர்களை நிறைத்தார். அதாவது அடையாளங்கள் மற்றும் அற்புதங்கள் மூலமாக முழுமையான நம்பிக்கையின் அந்தஸ்து வரை அவர்களை சென்றடைய செய்தார். மேலும் இறைனை அடையாளம் காண்பதன் ஒளியினைக் கொண்டு அவர்களின் உள்ளங்களை அந்த தூதர் ஒளிமயமாக்கினார்.

பின்னர் கூறினார்கள்: மற்றொரு கூட்டம் உள்ளது. அது இறுதிக் காலத்தில் வெளிப்படும். அவர்களும் மிகவும் மோசமான இருளிலும், வழிகேட்டிலுமே இருப்பார்கள். அறிவு, நுட்பமான ஞானம் மற்றும் நம்பிக்கையிலிருந்து விலகியிருப்பார்கள். அப்போது இறைவன் அவர்களையும் ஸஹாபிகளின் வடிவில் கொண்டு வருவான். அதாவது ஸஹாபிகள் என்னென்னவெல்லாம் கண்டார்களோ அவை இவர்களுக்கும் காட்டப்படும். எந்த அளவிற்கென்றால், அவர்களின் உண்மை மற்றும் உறுதி ஸஹாபிகளின் உண்மை மற்றும் உறுதிக்கு ஒப்பானதாக ஆகிவிடும்.

ஸஹீஹ் ஹதீஸில் உள்ளது. அதாவது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த வசனத்திற்கு தஃப்ஸீர் வழங்கிய நேரத்தில் ஸல்மான் ஃபார்ஸியின் தோளின் மீது கைவைத்து

لَوْ كَانَ الْاِيْمَانُ مُعَلَّقًا بِالثُّرَيَّا لَنَالَهٗ رَجُلٌ مِّنْ فَارِسَ

என்று கூறினார்கள். அதாவது ஈமான் கார்த்திகை நட்சத்திரம் வரை அதாவது வானத்திற்கு சென்றுவிட்டாலும் கூட அப்போதும் பாரசீக இனத்தைச் சேர்ந்த ஒரு நபர் அதனை திருப்பிக் கொண்டு வருவார்.

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 8 Thursday 20-27 April 2023 Issue No. 16 & 17

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

இதில் இந்த விஷயத்தின் பக்கம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதாவது திருக்குர்ஆன் விண்ணிற்கு உயர்த்தப்பட்டுவிடும் என்று எந்த காலத்தைப் பற்றி எழுதப்பட்டுள்ளதோ அது மஸீஹ் மவ்வூத் அவர்களின் இந்தக் காலமே ஆகும். ஈமான் மறைந்துவிட்டது. திருக்குர்ஆன் விண்ணிற்கு உயர்த்தப்பட்டுவிட்டது. அதன் பொருள் என்னவென்றால், அதன் படி அமல் செய்வது முடிந்துவிட்டது. எனவே இதுவே மஸீஹ் மவ்வூத் அவர்களின் காலகட்டம் ஆகும். மேலும் எவரின் பெயர் வாக்களிக்கப்பட்ட மஸீஹோ அவர் பாரசீக இனத்தைச் சேர்ந்தவர் ஆவார். ஏனெனில் சிலுவை தாக்குதல்களை முறியடிப்பதற்காக மஸீஹ் மவ்வூத் வரவேண்டியது இருந்தது. அந்த தாக்குதல் ஈமான் மீதான தாக்குதல் ஆகும். இந்த அனைத்து அடையாளங்களும் சிலுவை தாக்குதல்களின் காலத்தின் அடையாளங்களாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன. மேலும் எழுதப்பட்டுள்ளது: மக்களின் ஈமான் மீது அந்த தாக்குதலின் மிக தீய விளைவு ஏற்படும். அதே தாக்குதலைத் தான் பிறிதொரு சொற்களில் தஜ்ஜாலிய தாக்குதல் என்று கூறப்படும். அயைாளங்களாக கூறப்பட்டுள்ளது. அதாவது, அந்த தஜ்ஜாலிய தாக்குதல்களின் நேரத்தில் ஏராளமான அறிவீனர்கள் இணையற்ற ஏக இறைவனை விட்டு விடுவார்கள். மேலும் ஏராளமான மக்களின் ஈமானிய நேசம் தணிந்துபோய் விடும். மேலும், ஈமானை புதுப்பிக்கின்ற பணியே வாக்களிக்கப்பட்ட மஸீஹின் மாபெரும் பணியாக இருக்கும். ஏனெனில் தாக்குதல் ஈமான் மீது நடைபெறும். لَوْ كَانَ الْاِيْمَانُ என்று எந்த பாரசீக நபரைப் பற்றி உள்ளதோ அந்த பாரசீக இனத்தைச் சேர்ந்த நபர் ஈமானை மீண்டும் நிலைநாட்டுவதற்காக வருவார் என்பது நிரூபணம் ஆகியுள்ளது. எனவே இந்த நிலையில் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் காலமும், பாரசீக வம்சாவளியைச் சேர்ந்த நபரின் காலமும், பணியும் ஒன்றே ஆகும்.அதாவது ஈமானை மீண்டும் நிலைநாட்டுவது நிச்சயமாக மஸீஹ் மவ்வூத் அவர்களே பாரசீக வம்சாவளியைச் சேர்ந்தவர் ஆவார்கள் என்பதை உறுதியாக நிரூபணம் செய்கின்றது. மேலும் وَّاٰخَرِيْنَ مِنْهُمْ لَمَّا يَلْحَقُوْا بِهِمْ

என்ற வசனம் அவரது ஜமாஅத்திற்கு ஆதரவாகவே உள்ளது. அந்த வசனத்தின் பொருள் இதுவாகும்: வழிகேட்டின் உச்சத்திற்கு பிறகு நேர்வழி மற்றும் நுட்பமான ஞானத்தை பெறக்கூடியவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அற்புதங்களையும், அருட்கொடைகளையும் பார்க்கக் கூடியவர்கள் இரண்டே கூட்டத்தினர் ஆவர். முதல் கூட்டத்தினர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் தோற்றத்திற்கு முன்னர் கடுமையான இருளில் மூழ்கியிருந்த ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் ஸஹாபிகள் ஆவர். பின்னர், அதன் பிறகு, இறைவனின் அருளினால் அவர்கள் நபித்துவ காலத்தை அடைந்தார்கள். மேலும் அற்புதங்களை தமது கண்களால் கண்டார்கள். மேலும் முன்னறிவிப்புகளைக் கண்டார்கள். நம்பிக்கை அவர்களிடத்தில் எப்படிப்பட்ட மாற்றத்தை உருவாக்கியது என்றால் ஒருவகையில் அவர்கள் ஒரே ஆன்மாவாக ஆகிவிட்டார்கள்.

இரண்டாவது கூட்டத்தினர், மேற்கண்ட வசனத்திற்கேற்ப அமைந்த ஸஹாபிகளுக்கு ஒப்பான மஸீஹ் மவ்வூத் அவர்களின் கூட்டத்தினர் ஆவர். ஏனெனில், இந்தக் கூட்டத்தினரும் ஸஹாபிகளைப் போன்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அற்புதங்களைக் காணக் கூடியவர்கள் ஆவர். இருள் மற்றும் வழிகேட்டிற்கு பிறகு நேர்வழி பெறக்கூடியவர்கள் ஆவர். மேலும், اٰخَرِيْنَ مِنْهُمْ என்ற வசனத்தில் அந்த கூட்டத்தினருக்கு مِنْهُمْ என்ற செல்வம் அதாவது ஸஹாபிகளுடன் ஒப்புமை பெறக்கூடிய அருட்கொடையிலிருந்து பங்கு வழங்கப்பட்டுள்ளது. இதில் இந்த விஷயத்தின் பக்கம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அதாவது, ஸஹாபிகள் (ரலியல்லாஹு அன்ஹும்) ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அற்புதங்களை கண்டதைப் போன்றும், முன்னறிவிப்புகளைக் கண்டதைப்போன்றும் அவர்களும் காண்பார்கள். மேலும் இடைப்பட்ட காலத்தில் இந்த அருட்கொடையில் முழுமையான முறையில் பங்கு இருக்காது.

ஆக, இன்றைய காலத்தில் அவ்வாறே நிகழ்ந்துள்ளது. அதாவது ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு பிறகு மீண்டும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அற்புதங்களுக்கான வாசல் திறக்கப்பட்டு விட்டது. மேலும் தாருல் குதுனி ஹதீஸ் மற்றும் இப்னு ஹிஜ்ரின் ஃபத்வாவிற்கு ஏற்ப ரமலானில் வெளிப்பட்ட சூரிய, சந்திர கிரகணத்தை மக்கள் கண்டனர். அதாவது ஹதீஸின் கருத்திற்கேற்ப சூரிய, சந்திர கிரகணம் ரமலானில் நிகழ்ந்தது. அதேபோன்று, மஹ்தியாக தான் தோன்றிவிட்டதாக வாதம் செய்யப்பட்ட காலத்தில் சந்திர கிரகணம் தனது கிரகணத்திற்குரிய முதல் இரவிலும் சூரிய கிரகணம் தனது கிரகணத்திற்குரிய நாட்களில் இடைப்பட்ட நாட்களிலும் நிகழ்ந்தது. பூமியும், வானமும் உருவான நாள் முதல் ஒருபோதும் இந்த நிலை நிகழ்ந்ததில்லை. ஏனெனில், வரலாற்றின் பக்கங்களிலிருந்து இதுவரை இதற்கு நிகரானதை எந்த நபரும் நிரூபிக்க முடியவில்லை. ஒருகாலத்தில் அப்படி நிகழ்ந்தது என்று எவராலும் வரலாற்றிலிருந்து நிரூபிக்க முடியவில்லை. ஆக, இது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஓர் அற்புதமாக இருந்தது. அதனை மக்கள் கண்களால் கண்டு கொண்டனர். மஹ்தி மற்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் காலத்தில் வெளிப்படும் என்று கூறப்பட்டிருந்த வால் நட்சத்திரமும் வெளிப்பட்டது.

ஆயிரக்கணக்கான மனிதர்கள் அந்த வால் நட்சத்திரம் தோன்றியதை கண்டு கொண்டார்கள்.

அதேபோன்று ஜாவா நெருப்பையும் லட்சக்கணக்கான மனிதர்கள் கண்டார்கள். அதேபோன்று பிளேக் நோய் பரவுவதும், ஹஜ்ஜிலிருந்து தடுக்கப்படுவதும் இவை அனைத்தையும் தங்களின் கண்களால் சுயமே கண்டு கொண்டார்கள். நாட்டில் ரயில் வண்டி தயார் ஆனதும், ஒட்டகங்கள் கைவிடப்பட்டதும் உள்ளன. இவை அனைத்தும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அற்புதங்களாக இருந்தன. ஸஹாபிகள் (ரலியல்லாஹு அன்ஹும்) அற்புதங்களை கண்டது போன்றே இவை இக்காலத்தில் பார்க்கப்பட்டன. அற்புதங்களை பார்ப்பத்தில் இவர்களும் ஸஹாபிகளுக்கு ஒப்பானவர்களாக இருக்க வேண்டும் என்ற காரணத்தினால்தான் வல்லமை மிக்க அல்லாஹ் இந்த இறுதிக் காலத்து கூட்டத்தினரை மின்ஹும் என்ற சொல்லால் அழைத்துள்ளான்.

சிந்தித்துப் பாருங்கள்! ஆயிரத்து முந்நூறு வருடங்களில் நபித்துவத்திற்கான அந்தக் காலத்தை எவர் பெற்றார்? அந்தக் காலத்தில் நமது ஜமாஅத் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. ஏராளமான காரணங்களினால் இந்த ஜமாஅத்திற்கு ஸஹாபிகளுடன் ஒப்புமை உள்ளது. அவர்கள் அற்புதங்களையும், அடையாளங்களையும் காண்கின்றனர்.

ஸஹாபிகள் பார்த்ததைப் போன்று இன்றும் பார்க்கின்றோம். ஸஹாபிகள் பெற்றதைப் போன்று அவர்கள் இறைவனின் அடையாளங்களையும், புத்தம் புதிய உதவிகளுடன் ஒளியையும், நம்பிக்கையையும் பெறுகின்றனர். இறைவனின் வழியில் மக்களின் ஏளனம், எள்ளி நகையாடுதல், சாபம், வகை வகையான மனவேதனைகள், ஏச்சுப் பேச்சுகள், உறவை முறித்தல் போன்ற துன்பங்களை ஸஹாபிகள் எதிர் கொண்டதை போன்று அவர்களும் எதிர் கொண்டு வருகின்றனர். இன்றும் இதே நிலைதான் உள்ளது.

---

இதன் தொடர்ச்சி : அடுத்த இதழில்...

**National Watch Company**
**Sales & Service**

**B. Mohamed Adil**
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM
99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT
99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad